
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 27 இதழ் - 1 ஜனவரி 2014

தனிப்பிரதி ரூ.10/-



இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றும்.

நீங்கள் அதை அறியீர்களா ?

நான் வனாந்தரத்திலே வழியையும்

அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன் [ ஏசாயா 43 : 19 ]

# திருப்பூரில்
# சிறப்பு நற்செய்திக் கூட்டம்

நாள் : 26.1.2014 ஞாயிறு
நேரம் : மாலை 6:30 மணி

தேவ செய்தி :

சகோ. **EZS ராஜநாயகம்**
காங்கயம்.
(தமிழன் TV பேச்சாளர்)

இடம் :

**கிறிஸ்துவின் சபை கூடும் இடம்**
45, ஸ்ரீ வித்யா நகர் 2ம் வீதி
பூத்தார் தியேட்டர் சாலை, காலேஜ் ரோடு, திருப்பூர் - 2

தொடர்புக்கு : சகோ. K. சேகர் ஊழியர்
98426 65632


## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 1 |
| 2. ஏன் நாங்கள் கிறிஸ்துவை... | 9 |
| 3. பெண்கள் பகுதி | 14 |
| 4. வாலிபர் பகுதி | 17 |
| 5. சிறுவர் பகுதி | 20 |
| 6. உலகத்திலும் உலகத்திலுள்ள... | 22 |
| 7. சுவிசேஷ ஜோடி... | 25 |
| 8. வசன ரீதியான சபை ... | 28 |
| 9. சத்தியத்தை யோவான்... | 31 |


★ ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்

★ **முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.**

★ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

★ மணியார்டர் செய்யும் பொழுது உங்கள் அலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

★ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 27 JANUARY - 2014 Issue - 1**


ஆசிரியர் உரை

## வனாந்திரத்தில் வழி, அவாந்தரவெளியில் ஆறு

**பூ**மியிலே நாம் காண்கின்ற எல்லாவற்றுக்கும் பிறப்பிடம் என்று ஒன்று உண்டு. அதுபோல நாம் பேசுகின்ற தாய்மொழியாம் தமிழுக்கும் பிறப்பிடம் உண்டு. செம்மொழியாம் தமிழ் மொழி குறித்து கல்லும், மண்ணும் தோன்று வதற்கு முன்பாகத் தோன்றியது என்று வாய் நிறையப் பேசி, நெஞ்சு நிமிர்த்தி நடக்கும் ஏராளமான தமிழ்ப் பற்றாளர்கள் கூட தமிழ்மொழியின் பிறப்பிடத்தை அறிந்து வைத்திருப்பார்களா என்பது பெரும் சந்தேகமே. இன்றைய உலகில் ஏராளமான மொழிகள் பேசப்பட்டாலும், அவைகளுள் தொன்மையானவை என்று சொல்லப்படும் தகுதி மிகக் குறைந்த மொழிகளுக்கு மட்டுமே உண்டு. அப்படிப்பட்ட மொழி பேசுபவர்களுக்கு, அவைகளின் பிறப்பிடம் பற்றித் தெரியாவிட்டாலும் வேதாகமம் அதுபற்றி ஆணித்தரமான சான்று பகர்கிறது. தேவனால் கொடுக்கப் பட்ட பரிசுத்த வேதாகமம் பூகோள ரீதியாகவும், சரித்திர ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் வெளிப்படுத்தும் அனைத்தும் உண்மையானவைகள் என்று துல்லியமாக நிரூபிக்கப்பட்டுள்ளபடியால் மற்றும் நிரூபிக்கப்பட்டு வருகிறபடியால், மொழிகளின் பிறப்பிடம் பற்றியும் வேதாகமம் கூறுவது உண்மை தான் என்று அடித்துக் கூற முடியும். இதிலே எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

மனிதனுக்காகவே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு உண்டாக்கப்பட்ட இப்பூமியில் சுமார் 1500 ஆண்டுகள் வரையிலும் ஒரே மொழிதான் பேசப்பட்டு வந்தது (ஆதி. 11:1). ஆம், அந்த ஒரே ஒரு மொழி தான் ஏகபோகமாகக் கோலோச்சி வந்தது. அப்போது எல்லோராலும் எல்லாரிடத்திலும் எதை வேண்டுமானாலும் தாராளமாகப் பேசி எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது. ஆயினும்,

மனிதன் தன்நிலை உணராமல், தனக்கான தேவ நோக்கம் அறியாமல் தங்களுக்குப் பேர் உண்டாக்க வேண்டுமென்று விரும்பி (ஆதி. 11:4), தாங்கள் நினைப்பது தடைபடாது என்று எண்ணிச் செயல்பட்டபடியால் (ஆதி. 11:6), பூமியெங்கும் பேசப்பட்டு வந்த அந்த ஒரே மொழியைத் தேவன் தாறுமாறாக்கினார் (ஆதி. 11:7). பேசப்பட்டு வந்த ஒரே மொழி எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாத ஒரு குழப்பநிலை ஏற்பட்டது. இதினிமித்தம் அந்தந்த மொழி பேசினவர்கள் ஒவ்வொரு கூட்டமாகச் சேர்ந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போனார்கள் (ஆதி. 11:8,9).

நோவா காலத்து ஜலப்பிரளயத்துக்குப்பின், ஒரு 150 ஆண்டுகள் கழித்து, சிநெயர் தேசத்தில் அதுகாறும் பேசப்பட்டு வந்த ஒரே மொழி தாறுமாறாக்கப்பட்ட சம்பவம் நடந்திருக்கலாம் என்று தெரிகிறது. அப்போது பூமியின் மீதெங்கும் இருந்த மக்கள் தொகை சுமார் 30,000 என்று ஒரு கணக்குச் சொல்லுகிறது. இப்படி அந்த ஒரே மொழி தாறுமாறாக்கப்பட்ட பிறகு அந்த இடம் "பாபேல்" என்றழைக்கப்பட்டுள்ளது. நம் தாய்மொழித் தமிழ், உலகிலுள்ள தொன்மையான மொழிகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறபடியால், செம்மொழித் தமிழின் பிறப்பிடம் " பாபேல் " என்பது இதன் மூலம் பெரிதாகச் சந்தேகத்திற்கிடமின்றி உறுதியாகிறது.

இவ்வளவு சிறப்புக்குரிய தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு பேசக்கூடிய தமிழ் இனம் இந்தியாவின் தமிழ்நாடு உட்பட, வேறு சில நாடுகளின் குறிப்பிட்ட பகுதிகளில் கணிசமாக வாழ்ந்து வருகின்றது. அப்படி அவர்கள் வாழும் பகுதிகளில் வனாந்திரமும், அவாந்தரவெளியும் பெரும்பாலும் இல்லை என்று நாம் சொல்லமுடியும். ஆகவே, அதுபற்றிய முழுமையான புரிந்து கொள்ளுதல் தமிழ் இனத்திற்குப் பெரிதாக இருக்க வாய்ப்பில்லை. கொஞ்சம் ஏட்டறிவு உண்டு. ஆயினும், அநுபவித்தலும், அறிந்து கொள்ளுதலும் ஒருபோதும் ஒன்றாகிவிடாது. வனாந்திரத்தின் கொடுமை பற்றி அரபு நாடுகளில் வாழ்பவர்களிடமும், அவாந்தர வெளியின் கடுமை பற்றி பல ஆப்பிரிக்க நாடுகளில் அல்லல்படுகிறவர்களிடமும் கேட்டுப்பார்த்தால் நமக்குப் பெருத்த ஆச்சரியத்தைக் கொடுக்கும். வனாந்திரம் மற்றும் அவாந்தரவெளி பற்றிய பட்டறிவு நமக்கு இல்லாவிட்டாலும், அவைகளின் தன்மை பற்றிய படிப்பறிவு ஓரளவுக்காகிலும் இருக்கிறபடியால், இம்மாதத்திற்கான தலைப்பைப் புரிந்து கொள்ள வேண்டிய அளவுக்கு நம்மால் புரிந்து கொள்ள முடியுமென்று நம்புகிறேன்.

பரலோகத்தின் தேவன் காணக்கொடுத்த இப்புதிய ஆண்டின் முதல் மாதத்தில் நாம் தியானிக்க இருக்கும் தேவ பகுதியை முதலாவது கவனியுங்கள். **"முந்தினவைகளை நினைக்க வேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம். இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்திரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன் " (ஏசாயா 43:18,19).**

தொடர்ந்து நாம் செல்லுவதற்கு முன்பாக, நமது ஆசானின் வழக்கப்படி இதன் பின்னணி பற்றிக் கவனித்து விடுவோம்.

" பழைய ஏற்பாட்டு பவுல் " என்று வேத அறிஞர்களால் செல்லமாக அழைக்கப்படுகின்ற ஏசாயா ஒரு " மேசியா தீர்க்கன் ". மேசியாவாகிய இயேசு பற்றி இவர் ஒரு பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி போல காரியங்களை உரைக்காமல் புதிய ஏற்பாட்டு எழுத்தாளனைப் போல தத்ரூபமாக விளக்குகிறார். ஆகவே, ஏசாயா தீர்க்கதரிசன நூல், " ஏசாயா எழுதின சுவிசேஷம் " என்று கூட வேத விற்பன்னர்களால் அழைக்கப்படுகிறது. தெற்கு ராஜ்ஜியமாகிய யூதாவிலிருந்து இந்த ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார். இவை தவிர ஏசாயாவுக்கு இன்னும் ஒரு சிறப்பு உண்டு. ஆம், அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள ஆக்கில்லாவையும், பிரிஸ்கில்லாளையும் நாம் " சுவிசேஷ ஜோடி " என்று அழைப்பது போல, (அப். 18:26) இவரையும், இவருடைய மனைவியையும் நாம " தீர்க்கதரிசன ஜோடி " என்றழைக்க முடியும். ஏனெனில், ஏசாயாவின் மனைவியும் ஒரு தீர்க்கதரிசி தான் என்று நமக்குத் தெரிய வருகிறது (ஏசா. 8:3).

ஏசாயாவின் நாட்களில் ஜனங்கள் தேவனுக்கு முகத்தைக் காட்டாமல் முதுகைக் காட்டினபடியால், அதாவது தேவச் சட்டத்திற்கும், தேவதிட்டத்திற்கும் விரோதமான வாழ்க்கையை நடத்தினபடியால், ஜனங்கள் ஏசாயா தீர்க்கன் மூலம் இவ்விதம் எச்சரிக்கப்பட்டார்கள். " நீங்கள் மனம் பொருந்திச் செவி கொடுத்தால், தேசித்தின் நன்மையைப் புசிப்பீர்கள். மாட்டோம் என்று எதிர்த்து நிற்பீர்களாகில் பட்டயத்துக்கு இரையாவீர்கள்; கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று " என்றார் (ஏசாயா 1:19,20). பாவ காரியங்களைத் தேவன் கண்டும் காணாமலும் இருப்பார் என்று நினைப்போமானால் நாம் தேவனைப் பற்றித் தப்புக் கணக்குப் போடுகிறவர்களாகவே இருப்போம். தேவ எச்சரிப்பை யூதாவின் ஜனங்கள் பொருட்படுத்தாதபடியால், பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டு செல்லப்படுவார்கள் என்று முன்னறிவிக்கப்பட்டது. " அப்பொழுது, ஏசாயா எசேக்கியாவை நோக்கி; சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தையைக் கேளும். இதோ நாட்கள் வரும்; அப்பொழுது உன் வீட்டில் உள்ளதிலும், உன் பிதாக்கள் இந்நாள் வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய் வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படும் " (ஏசா. 39:5,6) என்றான். தேவனுக்கு விரோதமான ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

இப்படி அவர்கள் பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டு போகப்படுவது ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பிறகு நடக்க வேண்டிய ஒன்றாக இருந்தது. அந்நிய மண்ணில் அடிமைகளாக வாழ்பவர்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை நான் பெரிதாக விளக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், எகிப்தில் அடிமைகளாக இருந்தபோது இஸ்ரவேல் ஜனங்கள் பட்டபாடுகளைக் குறித்து நாம் அறிவோம். "எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரரைக் கொடுமையாய் வேலை வாங்கினார்கள். சாந்தும் செங்கலுமாகிய இவைகளைச் செய்யும் வேலையினாலும், வயலில் செய்யும் சகலவித வேலையினாலும், அவர்களுக்கு அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கினார்கள். அவர்களைக் கொண்டு செய்வித்த மற்ற எல்லாவேலைகளிலும், அவர்களைக் கொடுமையாய் நடத்தினார்கள் ". (யாத். 1:13,6). பாபிலோனிலும் அதற்கொத்த ஒரு சூழ்நிலையே இருக்கும். இது பரலோக தேவனுக்குத் தெரியாததல்ல. பாவம் செய்யும்போது தண்டிக்கும் நமது தேவன்,

பாடுகள் அனுபவிக்கும்போது மனமிரங்குகிறவராக இருக்கிறார். தேவனுடைய இத்தன்மை பற்றி இதே ஏசாயா தீர்க்கன் மேலும் கூறுவதைப் பாருங்கள். " நான் எப்போதும் வழக்காடமாட்டேன்; நான் என்றைக்கும் கோபமாயிருப்பது மில்லை; ஏனென்றால், ஆவியும் நான் உண்டு பண்ணின ஆத்துமாக்களும் என் முகத்துக்கு முன்பாகச் சோர்ந்து போகுமே " என்றார் (ஏசா. 57:16). அவர் தான் நம் தேவன். " கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கும் ஜனம் பாக்கிய முள்ளது " (சங். 144:15) என்று நம்பப்படுவதற்கான காரணங்களில் இது முக்கியமானது.

இப்படிப்பட்ட தேவன், நூறு ஆண்டுகளுக்குப் பிறகு பாபிலோனுக்கு அடிமைகளாய் கொண்டு போகப்பட்டு பாடுகள் அனுபவிக்கும்பொழுது, தம் ஜனம் முற்றிலும் சோர்ந்து போய் கைவிடப்பட்டதாய் உணரக் கூடாது என்றும் பாபிலோனிய அடிமைத்தனம் அவர்களுக்கு முடிவு அல்ல, அவர்களுக்கு மீட்பு உண்டு என்றும் நம்முடைய தலைப்புக்கான வசனங்களைக் கொண்டு நம்பிக்கை யூட்டி முன்னுரைத்துள்ளார். அவைகளைத்தான் நாம் இம்மாதம் தியானிக்க இருக்கிறோம். பாபிலோனிய அடிமைத்தனம் என்பது இந்நாளில் வாழும் நமக்கு நேரிடையாகப் பொருந்தாவிட்டாலும், அடிமைத்தனம் என்பது ஒருவகையில் நமக்கும் சம்பந்தமுடையதாகவே உள்ளது. ஒட்டுமொத்த உலகமானது பாவத்திற்கும், பெரும்பாலான தேவ ஜனம் தங்கள் அவபக்தியான வாழ்வினிமித்தம் உலகத்தின் பாடுகளுக்கும், சரீர வேதனைகளுக்கும் அடிமைகளாகவே வாழ்ந்து கொண்டுள்ளது. அப்படிப்பட்ட அனைவருக்கும் தேவன் இவ்வார்த்தைகள் மூலம் புதிய காரியங்களைச் செய்கிறேன் என்று வாக்களிக்கிறார்.

ஒரு புதிய ஆண்டை தேவ தயவால் ஆரம்பித்து நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். இந்த ஆண்டு எல்லா வகையிலும் மகிழ்ச்சியும், சமாதானமும் உள்ள ஆண்டாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். நமக்கு தேவன் புதிய ஆரம்பத்தைத் தர விரும்புகிறார். மனமாற்றத்தோடு அவரை நோக்கிப் பார்த்து, அவருடைய சித்தம் செய்ய நம்மை சமூலமாக ஒப்புக் கொடுக்கும் போது தேவன் நிச்சயமாக அவருடைய வாக்கை நிறைவேற்றுவார். சர்வவல்ல தேவனுக்கு இது இலேசான காரியம். ஆகவே, நம் தலைப்புக்கான வசனங்களைக் கொண்டு தேவன் நமக்கு என்ன சொல்லுகிறார் என்று சற்று விவரமாக இப்பொழுது கவனிப்போம்.

## I. முந்தினவைகளை நினைக்க வேண்டாம், பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம்

தங்கள் கீழ்ப்படியாமையினால் பாபிலோனிய அடிமைத்தனத்திற்குள் ளாக்ச் சென்று பாடநுபவிக்கப் போகிற யூதாவின் ஜனங்களுக்குத் தேவன் சொல்லுகிற முதல் காரியம், முந்தினவைகளை நினைக்க வேண்டாம், பூர்வமான வைகளைச் சிந்திக்க வேண்டாம் என்பது.

முந்தினவைகள் மற்றும் பூர்வமானவைகள் என்பது ஒரே பொருளைக் கொடுக்கக்கூடிய இரண்டு வேறுபட்ட வார்த்தைகள். இதன் மூலம் தேவன் கடந்தவைகளை, முடிந்து போனவைகளை நினைக்கக்கூடாது என்று இங்கே கூறுகிறார். தேவனோடு இருக்க வேண்டிய உறவில், மனிதனின் கடந்தகால

காரியங்கள் யாருக்கும் சரியாக இருந்ததில்லை (ரோமர் 3:23). ஏசாயாவின் நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேலர்களும் இதற்கு விதிவிலக்காக இருந்ததில்லை. யூதாவின் ஜனம் தங்கள் தேவ விரோத வாழ்க்கையினிமித்தமாகத்தான் தண்டிக்கப் பட்டு, பாபிலோனிய அடிமைத்தனத்திற்குள்ளாக வந்திருக்கிறார்கள். அவர்களின் தற்போதைய அவல நிலைக்கான காரணம் முந்தினவைகள் மற்றும் கடந்தவைகள் தான். ஆனால், அதையே நினைத்து நொந்து கொள்வதால் எவ்வித ப்யனுமில்லை. மனம் மாறிய ஒரு வாழ்க்கை தான் தேவையே ஒழிய, கடந்ததையே அசைபோட்டு குற்ற உணர்வோடு வாழும் வாழ்க்கை அல்ல. " பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடுகிறேன் " என்றே பவுல் கூறுகிறார் (பிலி. 3:13). பிசாசின் தந்திரங்களில் ஒன்று, கடந்தவைகளை அதாவது, நம் தேவ விரோத வாழ்க்கையை நாம் மறக்காமல் பார்த்துக்கொள்வது. அதன்மூலம் நம் மனசாட்சியைக் காயப் படுத்தி தொடர்ந்து அவனுக்கு அடிமையாகவே வைத்துக்கொள்ள வேண்டு மென்பது அவன் திட்டம். இது ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறுவதற்கோ, பக்தி வாழ்வில் தேவன் எதிர்பார்க்கும் உச்சத்தைத் தொடுவதற்கோ ஒருபோதும் நமக்கு உதவி செய்யாது. மாறாக, துக்கமுகத்தோடு நம்முடைய நாட்களைக் கழிக்கவே வழிவகுக்கும். நாம் துக்க முகத்தோடும், சோர்ந்த மனதோடும், பாவத்தோடும், கட்டுகளோடும், சமாதானக் குறைவோடும் இப்பூமியில் வாழ்வதற்காக தேவன் இயேசுவை இப்பூமிக்கு அனுப்பி நமக்காக அவரைச் சிலுவைக்கு ஒப்புக் கொடுக்க வில்லை.

தேவ நம்பிக்கையுடையவர்களாயிருந்து, தேவ சத்தத்திற்கும், தேவ சித்தத்திற்கும் ஒப்புக்கொடுத்து வாழ்பவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டு மென்பது தான் தேவனின் விருப்பம். இதைத்தான் பவுலடியார் பிலிப்பியருக்கு எழுதும்போது இவ்விதம் குறிப்பிடுகிறார். " கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமா யிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன் " (பிலி. 4:4) என்று. ஆதிக் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தி தேவனுக்கு விரோதமாக நடந்து கொண்ட (அப். 9 அதி.) தனது கடந்தகால வாழ்க்கையையே பவுலடியார் நினைத்துக் கொண்டிருந்திருப்பாரானால் அவரால் சந்தோஷமாக இருந்திருக்கவும் முடியாது, பிறருக்கு மகிழ்ச்சியாக இருங்கள் என்று எழுதியிருக்கவும் முடியாது.

அப்படியானால் அருமையானவர்களே, தேவன் கூட்டிக்கொடுத்த இப்புதிய ஆண்டு நமக்கு எப்படிப்பட்ட வாழ்வாக உள்ளது? கடந்தவைகளை நினைத்துக் கொண்டு இன்னும் பிசாசுக்கு அடிமைகளாக வாழ்ந்து கொண்டுள்ளோமா அல்லது மறு ரூபமான வாழ்க்கையை (ரோமர் 12:2) மேற்கொள்ள நம்மை அர்ப்பணித்து, பக்திவாழ்வில் புதிய உச்சத்தைத் தொட பயணத்தை மேற்கொண்டுள்ளோமா? சிந்திப்போம்.

## II. இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்

தங்கள் கீழ்ப்படியாமையினால் பாபிலோனிய அடிமைத்தனத்திற்குள்ளாகச் சென்று பாடநுபவிக்கப்போகிற யூதாவின் ஜனங்களுக்குத் தேவன் சொல்லுகிற அடுத்த காரியம், நான் புதிய காரியத்தைச் செய்கிறேன் என்பது.

தேவ ஜனங்களின் வாழ்வில் தேவன் புதிய காரியங்களைச் செய்வது ஒன்றும் புதிய செய்தி அல்ல. ஆனால், இங்கே கவனிக்க வேண்டியது அவர் "செய்கிறேன்" என்று சொல்லியிருப்பதுதான். " செய்வேன் " என்பதற்கும்

"செய்கிறேன் " என்பதற்குமுள்ள வேறுபாடு நமக்கு விளங்கக்கூடியதே. ஏற்கனவே செய்ய ஆரம்பித்த ஒன்றைத்தான் செய்கிறேன் என்று சொல்ல முடியும். இங்கே தேவன் தன்னுடைய ஜனங்களுக்குப் புதிய காரியத்தை ஆரம்பித்துவிட்டார். அவரை நம்புகிறவர்களுக்கும், அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கும் நன்மை செய்ய எப்பொழுதும் ஆயத்தமாகவே உள்ளார். நாம் நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக மாற்ற அவர் சித்தம் நிறைவேறக் காத்திருக்கிறவர்களாக மாற வேண்டும், அவ்வளவு தான். அப்படி மாறிவிட்டால் உபாகமம் நூலில் பார்ப்பது போல் " வருகையிலும், போகையிலும்" நாம் ஆசீர்வாதமுள்ளவர்களாக வாழ முடியும். நம்மில் எத்தனை பேர் தேவ வல்லமையை இவ்விதமாக நம் வாழ்வில் பெற்று அநுபவிக்கிறவர்களாக உள்ளோம்?

தேவன் அவருடைய பிள்ளைகளுக்குப் புதிய காரியத்தைச் செய்கிறேன் என்று மாத்திரம் சொல்லாமல், " இப்பொழுதே அது தோன்றும் " என்றும் கூறுவதை நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. பாடுகளோடு பாபிலோனில் இருக்கப்போகிற ஜனங்களுக்கான வாக்குத் தத்தம் இது. என் ஜனமே, முடிவில்லாத காலம் நீங்கள் பாடுகளோடு இருக்கத் தேவையில்லை. உங்கள் வாழ்வில் புதிய காரியத்தை நான் இப்பொழுதே தோன்றப் பண்ணுகிறேன் என்று அறிவிக்கிறார். இங்கே " தோன்றும்" என்பதும் முக்கியமான ஒரு வார்த்தை. இதன் பொருள் " இது வரைக்கும் காண முடியாததைக் காண்பது ". இந்த வார்த்தையைக் கொண்டு, உங்கள் வாழ்வில் நீங்கள் இதுவரைக்கும் காணமுடியாததைக் காண்பீர்கள் என்று வாக்குரைக்கிறார்.

இந்த வாக்குத்தத்தம் சரீரப் பிரகாரமான இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்தாலும், ஆவிக்குரிய இஸ்ரவேலர்களுக்கும் பொருந்துகிறதாகவே உள்ளது. புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படியான கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாகவே உள்ளனர் (கலா. 3:29). அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் இப்புதிய ஆண்டில், புதிய காரியத்தைச் செய்கிறவராகவும், இதுவரைக்கும் காணாத நன்மையானவைகளைக் காணச் செய்வதாகவும் வாக்கு கொடுக்கிறார். தேவ வாக்கை நம்பி நாம் நன்மை பெறுவோம்.

இப்பொழுதே தோன்றும் என்று உறுதியாகச் சொல்லுகிற நம் தேவன், அதைத் தொடர்ந்து ஒரு கேள்வியை எழுப்பியுள்ளதைப் பாருங்கள்!. " நீங்கள் அதை அறியீர்களா? " என்று. மனம் வெதும்பிக் கேட்கப்பட்ட கேள்வி. தேவனையும், அவருடைய வல்லமையையும் அறிகிற காரியத்தில் அந்நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேலர்கள் படுமோசம். ஒரு வகையில், மிருகங்களைக் காட்டிலும் மோசமானவர்கள். எப்படி இப்படிச் சொல்லலாம் என்று கேட்கிறீர்களா? நல்ல கேள்வி தான். அவர்கள் மிருகங்களைக் காட்டிலும் மோசமானவர்கள் என்று நான் சொல்லவில்லை. தேவாதி தேவன் தான் அப்படிக் கூறுகிறார். எப்படியெனில், ஏசாயா நூலின் ஆரம்பத்தில் இப்படியாக வசனம் உள்ளது. " மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னனையையும் அறியும்; இஸ்ரவேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது என்கிறார் " (ஏசா. 1:3). போதுமா?

அன்பானவர்களே, நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? தேவனைப் பற்றிய அறிவும், கிறிஸ்துவின் உபதேசங்கள் பற்றிய உணர்வும் இல்லாத ஒரு

பக்தி வாழ்க்கையை நடத்திக் கொண்டுள்ளோமா? பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயம் இப்படித்தான் வாழ்ந்து கொண்டுள்ளது. இது ஒரு கசப்பான உண்மை. ஆயினும், உண்மை. இயேசு ஆண்டவர் தன்னுடைய ஊழிய நாட்களில் இந்த விதமான ஒரு கேள்வியை தம்மைப் பின்பற்றின சீடர்களைப் பார்த்துக் கேட்டுள்ளார். "அப்படியானால், நீங்கள் உணராதிருக்கிறது எப்படி? " என்று (மாற்கு 8:21). அநேகரால் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போவதற்கான காரணங்களில் இது பிரதானமானது. ஆம், தேவனைப் பற்றிய அறிவும், தேவ காரியங்களைப் பற்றிய உணர்வும் உள்ளவன் பரிசுத்த தேவனுக்கு முன்பாக தான் எப்படிப்பட்டவன் என்பதை ஒத்துக்கொள்வான். அப்பொழுது தேவ சட்டத்தின் படியான உண்மையான மனமாறுதலை தன் பாவத்தினிமித்தம் காட்டுவான். அப்படி மனம் மாறும் பொழுது, அவன் யாராக இருந்தாலும், தேவ ஆசீர்வாதமும், தேவ இரக்கமும் பரத்திலிருந்து சுரந்து வரும். மாறாக, ஒருவன் தான் பாவி என்பதை ஒத்துக்கொள்ளாமல் தன் பாவங்களை மறைக்கிறவனாக இருந்தால் ஆவியிலும், சரீரத்திலும் வாழ்வடையவும் முடியாது, தேவ இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது (நீதி. 28:13; மத். 6:33). இம்மாபெரும் உண்மை யைப் புரிந்தவர்களாக இப்புதிய ஆண்டின் காரியங்களை நாம் மேற்கொள்ளுவோம்.

## III. வனாந்திரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்

தங்கள் கீழ்ப்படியாமையினால் பாபிலோனிய அடிமைத்தனத்திற்குள்ளாகச் சென்று பாடநுபவிக்கப்போகிற யூதாவின் ஜனங்களுக்குத் தேவன் சொல்லுகிற இன்னுமொரு காரியம், வனாந்திரத்திலே வழியையும், அவாந்திரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன் என்பது.

வனாந்திரம் என்பது மனித சஞ்சாரமற்ற ஒரு பகுதி. உயிரினங்கள் வாழ்வதற்குத் தேவையானவைகள் எதுவும் அங்கு இருக்காது. அவாந்தரவெளி என்பதும் கிட்டத்தட்ட வனாந்திரம் போன்றது தான். எதற்கும் லாயக்கற்ற ஒரு நிலப்பரப்பு. இப்படிப்பட்ட பகுதிகளில் மனித நடமாட்டம் இருக்க வாய்ப்பில்லை. மனிதர்கள் போக்கும் வரத்துமாய் இருக்கின்ற பகுதிகளில் தான் பயணிக்கப் பாதை இருக்கும். மற்றபடி அப்பகுதிகளுக்கு மனிதர்கள் சென்றால் உபாதை தான் மிஞ்சும். எங்கே போவது, எப்படிப்போவது என்ற பயமும், குழப்பமும், கவலையும் பற்றிக் கொள்ளும். ஒருவேளை, இப்படிக் கலக்கமான சூழ்நிலை நம் வாழ்வில் இருந்தாலும் நாம் கவலைப்பட வேண்டாம். ஏனெனில், நான் உனக்கு வழியை உண்டாக்கி, உன் வாழ்க்கைப் பாதையைச் செழிப்புள்ளதாக மாற்றுவேன் என்று கர்த்தர் கூறுகிறார்.

ஏசாயா தீர்க்கன் இங்கே யாரிடத்தில் பேசுகிறாரோ அவர்களின் முன்னோர் களைப் பாதையில்லாத சீனாய் வனாந்திரத்தில் தேவன் அற்புதமாய் வழி நடத்தி யுள்ளார். இனி விடுதலையே கிடையாது என்று எண்ணப்பட்ட எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலையாக்கி, வனாந்திரத்தில் வழியை மாத்திரம் ஏற்படுத்தாமல் அப்பமும், தண்ணீரும் கொடுத்து மேகஸ்தம்பத்தினாலும், அக்கினி ஸ்தம்பத்தினா லும் வழிநடத்தினார். இஸ்ரவேலின் சரித்திரத்தை அறிந்த யூதாவின் ஜனங்களுக்கு இந்த உண்மை புரியக்கூடிய ஒன்றாகவே இருந்திருக்கும்.

சர்வவல்ல தேவன் தம்முடைய கிரியையை நடப்பிப்பதற்குத் தேவை யானது உண்மையான மனமாற்றத்துடன் கூடிய தேவ பக்தியேயல்லாமல்


வேறெதுவுமல்ல. அவரை விட்டு வழிவிலகிப் போனவர்களிடத்தில் அதைத்தான் தேவன் எதிர்பார்க்கிறார். அன்றும் அதுதான் உண்மை. இன்றும் இதுதான் தேவை "நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை தேவன் ஒருபோதும் புறக்கணிப்பதில்லை " (சங். 51:17).

அருமையானவர்களே, அன்றைக்கு யூதாவின் ஜனங்களிடத்தில் பேசப் பட்ட வார்த்தைகள் நமக்கும் சம்பந்தமுடையதாக, இப்பூமிக்குண்டான அநேக ராகிய நமக்கு வாழ்க்கை வனாந்திரமாகவும், அவாந்தர வெளியாகவும் காட்சி தருகிறது. என்னால் வாழவே முடியாது என்றும், இதற்கு மேல் நான் முயற்சிப்பது வீண் என்றும் நினைக்கும்படியாக உள்ளது. நான் கடந்து செல்கின்ற வனாந்திரமான வாழ்க்கையிலிருந்து எனக்கு விடுதலையே கிடைக்காதா என்று ஏங்கும் நிலை உள்ளது. இதை தேவன் அறிவார். ஏனெனில், இதை அனுமதித்தவர் தேவன் தான். யூதாவின் ஜனங்கள் தேவ எச்சரிப்பை மீறியதால் தான் பாபிலோனிய அடிமைத் தனத்திற்குள்ளாக அனுமதித்தார்.

அதுபோல, நாம் கடந்து சென்று கொண்டிருக்கும் கலக்கத்தின் வாழ்க்கைக்கும் காரணம் உண்டு. நமக்கும், தேவனுக்கும் இடையே இருக்க வேண்டிய உறவில் ஏற்பட்ட விரிசலோ அல்லது பிளவோ தான் அந்தக் காரணம். ஆயினும், நாம் மனந்திரும்பி தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது, கிறிஸ்துவின் உபதேசப்படி தேவன் விரும்பி ஏற்றுக்கொள்ளும் வாழ்க்கையை ஆரம்பிக்கும் போது, நாம் நினையாத அளவில் நம்முடைய நிலையை மாற்ற அவரால் முடியும். ஆம், வனாந்திரமாக மாறிப்போன வாழ்க்கையில் வழியும், அவாந்தரவெளியாகக் காட்சி தரும் வாழ்க்கையில் ஆறுகளும் உண்டாகும். நாம் ஒருபோதும் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. வாக்குத்தத்தம் பண்ணிவர் உண்மையுள்ளவர்.

ஆகையால், அன்பானவர்களே, இப்புதிய ஆண்டில் தேவனுக்குப் பிரியமானதொரு வாழ்க்கையை நடத்த நம்மை அர்ப்பணிப்போம். சிலுவைக்குப் பின்னால் வாழும் நாம் தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையை மேற்கொள்வதற்கு எல்லாவற்றுக்கும் போதுமானதாயிருக்கிற (2 தீமோ. 3:16,17) மற்றும் பூரணப் பிரமாணமாயிருக்கிற கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு (யாக். 1:25) நம்மை முழுமையாக ஒப்புக் கொடுக்க வேண்டும். ஏனெனில், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டுக்கு உபதேசம் தான் நம்மை இறுதி நாளில் நியாயந்தீர்க்கப்போகிறது (யோவான் 12:48). நம்மை எச்சரிக்கும் இப்பேருண்மையை உணர்ந்து, கிறிஸ்துவுக்கும், அவர் கட்டியுள்ள ஒன்றான மெய் சபைக்கும் (மத். 16:18), அவர் போதித்துள்ள ஒன்றான இரட்சிப்பின் திட்டத்திற்கும் (யோவான் 14:6; அப். 2:38), அவர் வெளிப்படுத்தியுள்ள உண்மையான ஆராதனை முறைக்கும் (யோவான் 4:24) நாம் நம்மைக் கீழ்ப்படுத்துவோம். இது மாத்திரம் தான் நம் பக்தி வாழ்விலும், சரீர வாழ்விலும் நமக்கு வழியை உண்டு பண்ணி வெற்றி நடை போட வைக்கும். ஆறுகளை உண்டாக்கி நம் வாழ்வை செழிப்புள்ளதாக மாற்றும். வேறுவழியே இல்லை.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!



# ஏன் நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம்?

**Bro. J.C. சோட்**

ஒருவர் ஏதோ ஒன்றை விசுவாசித்தால் அவர் அதை அப்படி விசுவாசிப்பதற்கான சில காரணங்கள் இருக்க வேண்டும். நானும், என் சகோதரர்களும் கிறிஸ்தவர்களாகவும், தேவனுடைய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாகவும் இருக்கிறபடியால் இது நிச்சயமாகவே உண்மையாயிருக்கிறது.

நாங்கள் ஏன் தேவனை விசுவாசிக்கிறோம் என்பதற்கு நான் ஏற்கனவே சில காரணங்களை உங்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். இப்போது நான் உங்களிடத்தில் இயேசு கிறிஸ்துவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் ஏன் விசுவாசிக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

முதலாவது, இயேசு நம்மைப் போல ஒரு சாதாரண மனிதர் அல்ல என்பதை நான் உங்களுக்கு விளக்க ஆசைப்படுகிறேன். அவர் ஒரு கள்ளப் போதகரும் அல்ல. அவர் மறுபடியும் வாழாமலிருக்கும்படியாக மரிக்கவில்லை. *இரண்டாவது, கிறிஸ்து ஆதியிலிருந்து தேவனோடு இருந்திருந்தாலும்* (ஆதி. 1:1) *அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருந்தாலும்* (யோவான் 1:1-3) அவர் பிதாவாகப் பேசப்பட வில்லை. மாறாக, அவர் தேவனுடைய குமாரனாகப் பேசப்பட்டிருக்கிறார். ரோமர் 1:20; அப். 17:39 ; கொலே 2:9 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ள "தேவத்துவம் " என்ற வார்த்தையில் ஆள்தத்துவங்கள் அடங்கியிருக்கிறது என்பதை தயவு செய்து மனதில் கொள்ள வேண்டும். *பிதாவாகிய தேவன், குமாரனாகிய கிறிஸ்து,* தேவ வார்த்தைகளைத்தந்த பரிசுத்த ஆவியானவர் அல்லது வேத *வாக்கியங்களின் ஆசிரியரான பரிசுத்த ஆவியானவர்* (எபே. 4:1-6). மறுபடியும், வேத வாக்கியங்கள் ஒரே தேவன் பற்றியும், மூவரும் ஒன்றாயிருக் கிறார்கள் என்பது பற்றியும் I தீமோ. 2:5 மற்றும் யோவான் 17 ஆம் அதிகாரத்தில் பேசுகிறது. சிலர், இது புரிந்து கொள்வதற்கு கடினமானதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதை விளக்க முற்படும் போது, சிலர், இயேசு தேவன் என்றும், அதே இயேசு பரிசுத்த ஆவியானவர் என்றும் சொல்கிறார்கள். ஆனால், மறுபடியும், மறுபடியும் வேத வாக்கியங்கள் மூவரையும் வித்தியாசமான ஆள் தத்துவங்களை உடையவர் களாகவே காட்டுகிறது. *ஒருவரோடு ஒருர் பேசுவதையும், ஒருவரோடு ஒருவர் இணைந்து செயல்படுவதை யும் நாம் வேத வசனங்களில் பார்க்க முடியும்* (மத்தேயு 17:5; யோவான் 16:13). இன்னும் சிலர், கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருந்தால் தேவனுக்கு திருமணம் ஆகியிருக்க வேண்டும் என்று வாதிடுகிறார்கள்.

இக்காரியத்தில், அவர்கள் மனிதப் பண்புகள் மற்றும் கோட்பாடுகளை தேவத் துவத்தோடு பொருத்தப் பார்க்கிறார்கள். எனவே, இது சரியான பதிலைத் தராது. கிறிஸ்து குமாரனாக பேசப்பட்டிருக்கும் போது, அவர் ஆதியில் தேவனோடிருந்தார், தேவனுக்குச் சமமாக இருந்தார். ஆனால், இந்த உலகத்திற்கு வருதற்கு தம்மை முற்றிலுமாகத் தாழ்த்தினார். அது மாத்திரமல்ல, ஒரு கன்னியினிடத்தில் பிறப்பதற்கும், மனிதன் இரட்சிப்படைந்து, நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கும் அவனுடைய பாவங்களுக்காக மரிக்கும் அளவிற்கு தம்மைத் தாழ்த்தினார். தேவத்துவம் பற்றிய இரகசியத்தை நாம் முழுமையாக புரிந்து கொள்ளாவிட்டாலும், இது குறித்த முழுமையான அறிவு நமக்கு இருக்க வேண்டுமென்கிற அவசியம் இல்லை. எப்படி தேவன் எப்போதும் இருக்கிறவராக இருக்க முடியும் என்பதை மனிதர்களாகிய நாம் நம்முடைய அறிவைக் கொண்டு புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், விசுவாசத்தி னாலே நாம் அதை ஏற்றுக் கொள்கிறோம். இதே கருத்தினடிப்படையில் தான் கிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருக்கிறார் என்பது உண்மையாயிருக்கிறது.

இரண்டாவது, நாங்கள் ஏன் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறோம் என்பதற்கும், ஏன் உயிர்த்தெழுந்த கர்த்தர் மனிதனுடைய இரட்சகராக இருக்கும்படியாக பரலோகத்திலிருக்கிற தகப்பனிடத்திற்குத் திரும்பி னார் என்பதற்குமான சில காரணங்களை உங்களுக்குக் கொடுக்கிறோம். அதன் பொருள், நாம் கிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசியை விட, மாபெரும் போதகர் என்பதை விட மேலாகப் பார்க்க வேண்டும் என்பதே. ஏனென்றால், அவர் நம்மில் அன்பு கூர்ந்து, நாம் இந்த உலகத்தில் இரட்சிக்கப்படவும், வருகின்ற உலகத்தில் இரட்சிக்கப் படவும் நமக்காக மரிக்க முன் வந்தார்.

அவர் எப்போதும் இருக்கிறவராயிருக்கிறபடியால் நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். ஆதியாகமம் 1:1 ன்படி இயேசு ஆதியிலே தேவனோடிருந்தார். கிறிஸ்துவைப் பற்றி யோவான் 1:1, 2 ல் நாம் இப்படியாக வாசிக்கிறோம். ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார் என்று.

கிறிஸ்து மூலமாகவும், கிறிஸ்துவைக் கொண்டும் எல்லாம் உண்டாக்கப்பட்ட படியினாலே நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். ஆதியாகமம் 1:1 ல் பேசப் பட்டிருக்கிற சிருஷ்டிப்பில், கிறிஸ்து ஈடுபடுத்தப்பட்டிருந்தார். ஆதியாகமம் 1:26, 27 வசனங்களின்படி, மனித சிருஷ்டிப்பில் அவர் ஈடுபட்டிருந்தார். யோவான் 1:3-ல் நமக்கு இப்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சகலமும் அவர் மூலமாய் உண்டா யிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அதன் பொருள், நம்மைச் சுற்றிலும் இருக்கிறவைகளை நாம் பார்க்கும் போது இவைகள் எல்லாம் எங்கிருந்தோ வந்தது என்ற முடிவுக்கு வரவேண்டும். ஆனால், இவைகள் எல்லாம் எங்கேயிருந்து வந்தது? இவைகளெல்லாம் சிருஷ்டிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறோம். அப்படியானால், யாரால்? கிறிஸ்துவால். அது உண்மை யாக இருக்குமானால், நம்மைப்பற்றி எல்லாக் காரியங்களை பார்க்கும் போதும், நம்மைப் பற்றி ஆழ்ந்து யோசிக்கும் போதும், கிறிஸ்துவைப் பற்றி நாம் நினைப்பூட்டப்படுகிறோம். அப்படியானால், "*நம்மால் எப்படி அவரை விசுவாசிக் காமல் இருக்க முடியும்? பவுல் கிறிஸ்துவைப் பற்றி இப்படியாக எழுதினார்* "

(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால், *அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய, காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது;* (கொலோசெயர் 1:14-17).

மூன்றாவது, கிறிஸ்து வருவார் என்று தீர்க்கதரிசனங்களில் முன்னுரைக்கப் பட்டிருக்கிறபடியாலும், அந்த தீர்க்கதரிசனங்களெல்லாம் அவருடைய வருகையோடு நிறைவேற்றியுள்ளபடியாலும், நாங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறோம். *ஏதேன் தோட்டத்தில் மனிதனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு, அவன் தேவ சமூகத்திலிருந்து துரத்தப்பட்டபோது, கிறிஸ்து மனிதனை இரட்சிக்க வருவார் என்று சொல்லப்பட்டது* (ஆதி. 3:15). பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் மேசியாவின் வருகை பற்றி அடிக்கடி பேசியிருக்கிறார்கள். உண்மையில், அவருடைய வருகைப் பற்றி அநேக காரியங்களை அவர்கள் துல்லியமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவர் எங்கே பிறப்பார், ராஜாவின் கோபத்திற்கு தப்பித்துக் கொள்ள அவர் எகிப்துக்கு எப்படி கொண்டு செல்லப்படுவார். தன்னுடையவர்களில் ஒருவரால் அவர் எப்படி காட்டிக் கொடுக்கப்படுவார் மற்றும் பொய்யான விசாரணை, அவர் சிலுவையிலறையப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவது, கடைசியாக பரலோகத்திருக்கிற பிதாவினிடத்தில் திரும்புவது போன்றவற்றைப் பற்றியெல்லாம் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்துள்ளார்கள். உதாரணமாக, ஏசாயா 53 ஆம் அதிகாரம் கிறிஸ்துவைப் பற்றி பேசுகிறது. அப் 8-ஆம் அதிகாரத்தில் இதே பழைய ஏற்பாட்டு வசனப்பகுதியை முன்னிட்டு கிறிஸ்துவைப் பற்றி எத்தியோப்பியாவிலிருந்து வந்த ஒரு மனிதனுக்கு பிலிப்பு போதித்ததாக நாம் வாசிக்கிறோம். நிச்சயமாகவே இது தற்செயலாக நடந்த ஒரு காரியம் அல்ல.

கிறிஸ்து மிகவும் அற்புதமான முறையில், இந்த உலகத்தில் பிறந்தபடியால் நாங்கள் அவரை விசுவாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி இப்படியாகச் சொன்னார். "*ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாக ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் என்று* (ஏசாயா 7:14). இதன் நிறைவேறுதலைக் குறித்து, வேத வசனம் இப்படிச் சொல்கிறது. " *இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளி விட யோசனையாயிருந்தான். அவன் இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது*

*பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமார னைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவள்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக் கொண்டு அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியா திருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்* ", (மத்தேயு 1:18-25). அப்படியென்றால், இயேசுவுக்கு பூமிக்குரிய தகப்பன் இல்லை, அவர் பரலோகத்திலிருக்கிற தன்னுடைய பிதாவினிடத்திலிருந்து வந்தவர். கிறிஸ்து மற்ற மனிதர்களைப் போல பூமிக்குரிய தகப்பனுக்கும், தாய்க்கும் பிறந்திருந்தால் அவரும் ஒரு இரட்சகராக இருக்கிற படியால் மனிதனுடைய இரட்சகராக இருக்க முடியாது.

நான்காவது, கிறிஸ்து, தான் பிதாவினிடத்திலிருந்து வந்ததை நிரூபிப் பதற்காக அற்புத அடையாளங்களைச் செய்தபடியால் நாங்கள் அவரை விசுவாசிக் கிறோம். அவர் வியாதியுள்ளவர்களைச் சுகப்படுத்தினார், குருடர்களுக்குப் பார்வை கொடுத்தார், செவிடர் கேட்கும்படி செய்தார், ஊமை பேசும்படி செய்தார், சப்பாணி களை நடக்கச் செய்தார். இன்னும், அவர் திருமண விருந்தில் தண்ணீரை திரட்ச ரசமாக்கினார், கொந்தளித்த கடலை அமைதிப்படுத்தினார், தண்ணீரின் மேல் நடந்தார், மரித்தோரை உயிரோடு எழுப்பினார். புதிய ஏற்பாட்டின் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் புத்தகங்களில் இந்த அற்புதங் களை ஒருவன் வாசிக்க முடியும். *நாம் இப்படியாக வாசிக்கிறோம், "பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமி லிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்* ", (யோவான் 2:23). யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு இயேசுவைப் பார்த்து, " *ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில், ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்* என்றான் (யோவான் 3:2). இறுதியாக, நாம் இப்படியாக வாசிக்கிறோம். *இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படி யாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படி யாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது* " (யோவான் 20:30,31).

தேவன், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மற்றும் அநேகர், ஏன் அவருடைய சத்துருக்கள், இன்னும் பிசாசுகள் அவரை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்திருக்கிறபடியால் கிறிஸ்துவை நாங்கள் விசுவாசிக்கிறோம். *கிறிஸ்து மறுரூபமான போது, தேவன் வானத்திலிருந்து இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று* சொன்னார் (மத்தேயு 17:5). மற்றுமொரு சந்தர்ப்பத்தில் *பேதுருவும், அப்போஸ் தலர்களும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தார்கள்*

(மத்தேயு 16:16-18). நிச்சயமாகவே, அவர்களும், மற்றவர்களும் இப்படியாகச் சொல்வதற்கு சிறப்பான காரணம் இருந்தது.

ஐந்தாவது, கிறிஸ்து பாவமற்ற வாழ்க்கையை வாழ்ந்து, மனிதன் இரட்சிக்கப்படும்படி மரித்து, கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தபடியால் நாங்கள் அவரை விசுவாசிக்கிறோம். I பேதுரு 2:22-ல் அவர் பாவஞ்செய்யவில்லை என்று பேதுரு சொன்னார். பவுல் சொல்லும் போது, *நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்* (ரோமர் 5:8) என்றார். ஆனால், *மன்னிப்பை நமக்கு உறுதிப்படுத்தும்படியாகவும், நம்முடைய இரட்சகராகும்படியும், நித்திய ஜீவனில் நம்பிக்கையாயிருக்கும் படியாகவும் கிறிஸ்து கல்லறையை ஜெயித்து* எழுந்தார் (I கொரி. 15:1-4).

*நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களா? அவர் தேவனுடைய குமாரன் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நாம் தேவனிடத்தில் விசுவாசமாயிருந்தால் நாம் கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசமாயிருக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார்* (யோவான் 14:1). மேலும் கிறிஸ்து, "*மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்*" என்றார் (மத்தேயு 10:32). எனவே, நம்முடைய இரட்சிப்பு கிறிஸ்துவின் பேரில் நாம் வைத்திருக்கிற விசுவாசத்தை சார்ந்திருக்கிறது.

நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, *உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்கென்று முழுக்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். இப்படி நீங்கள் செய்தால் கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார்* (மாற்கு 16:10; அப் 2:47).

## சோர்வின் போது செய்ய வேண்டியவைகள்

1. பெலனுக்காக தேவனுடைய வசனத்திற்கு திரும்ப வேண்டும் (எரே. 20:9)
2. நீங்கள் சோர்வடைவது சாத்தானின் விருப்பம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் (1 பேதுரு 5:8)
3. சங்கீதம் 73-ஐ வாசித்து அங்கே சங்கீதக்காரன் சொல்வதைக் கற்றுக் கொள்ளவேண்டும்.
4. சோதனையின் மூலமாகத்தான் வளர்ச்சி ஏற்படும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள் (யாக். 1:2,4)

பெண்கள் பகுதி

# ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதல்

**RR NAYAGAM**

கிறிஸ்தவர்களுக்கு கீழ்ப்படிதல் என்பது அனுதினமும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்று என்று தேவன் சொல்லியிருக்கிறார். அவருடைய பிள்ளைகள் தன்னைப் போலவும், இயேசுவைப் போலவும் இருக்க வேண்டுமென்பதுதான் அவருடைய திட்டம். இந்த உலகத்தில் நாம் பிறந்தபோது நம்முடைய இரத்த சம்பந்தப்பட்ட உறவுகளை விட்டு விட்டு நித்திய வாழ்வுக்கு சம்பந்தமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆயத்த மாக்கப் பட்டிருக்கும் இடத்திற்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும்போது அதில் நம் பங்காக நாம் செய்ய வேண்டியது என்னவெனில் நம்முடைய சொந்த சித்தத்தை விட்டுவிடுதல். அது மிகவும் கடினமானது, குறுகினது, சிலர் அதைத் தேடுகிறார்கள்.

அகலமான பாதை மரணத்துக்கு வழி நடத்துகிறது. அங்கே ஆயிரக்கணக் கானோர் ஒன்றாக சேர்ந்து நடக்கிறார்கள். ஆனால், வேதாகமம் ஒரு குறுகலான பாதையை காட்டுகிறது. அதில் அங்கேயும், இங்கேயும் சிலர் நடந்து கொண்டிருக் கின்றனர்.

வேதாகமம் என்ன இப்படி ஓர் அர்த்தம் இல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறீர்களா? " *நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிற தென்று நினைக்கிறீர்களா? அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது. ஆகையால், தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்* " (யாக். 4:5,7).

அவருடைய அதிகாரத்திற்கும், போதனைகளுக்கும் கீழ்ப்படியும்போது தேவனிடமும், சக கிறிஸ்தவர்களிடமும் நாம் இழுத்துக் கொள்ளப்படுகிறோம். மாறாக, சாத்தானுக்கும், அவன் அதிகாரத்திற்கும் கீழ்ப்படிந்து செயல்படும்போது நாம் இழந்துப் போகிற நிலைக்கு தள்ளப்படுகிறோம். " கர்த்தர் தேவ பக்தியுள்ளவர் களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக் குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார். விசேஷமாக அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து, கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறவர்களை அப்படிச் செய்வார் " (2 பேதுரு 2:9,10).

கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் சமாதானத்தைக் காத்துக் கொள்ளு கிறவர்கள் தேவனுக்கும் மற்றும் சக கிறிஸ்தவர்களுக்கும் பணி செய்கிறவர் களாயிருக்கிறார்கள். நமதாண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து

மரணபரியந்தம், அதாவது, சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி. 2:6,8). இவ்வாறு தம்மைத் தாழ்த்தினதால் தேவன் அவரை எல்லாவற்றுக்கும் மேலாக உயர்த்தினார்.

அருமையானவர்களே! தேவன் நம்முடைய கீழ்ப்படிதலை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை நம்புவதற்கு நிறைய விசுவாசம் வேண்டும். அவருடைய நாமத்திற்காக நாம் ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாக செய்யும் காரியங்களைக் கூட தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார். நம்முடைய தாழ்மை, கீழ்ப்படிதல் இவைகளை அறிந்து வைத்திருக்கிறார் என்பதை நம்புவதற்குக் கடின மாயிருக்கிறது. ஆனால், அவர் கவனிக்கிறார்.

இராஜாதி இராஜவாகிய இயேசு கிறிஸ்து மனிதர்களால் துப்பப்படுவதற்கு தன்னை அனுமதித்தார். அவரைக் கொலை செய்ய வகை தேடினவர்கள் காணாமல் போய் வெகு காலமாகி விட்டது. ஆனால், இயேசு இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் இன்னும் வல்லமையுடனும், மகிமையோடும் நம்மை ஆண்டு கொண்டிருக்கிறார்.

தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிப்பதாக தேவன் வாக்குக்கொடுத் திருக்கிறார்.யாரெல்லாம் கீழ்ப்படிதலோடு இருக்கிறார்களோ அவர்களுக்கு தேவன் நிறைய நன்மைகளைக் கொடுக்கிறார். நீதிமான்களின் வேண்டுதல்களுக்கு அவருடைய செவிகள் திறந்திருக்கிறது. " *கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதல்களுக்குக் கவனமாயிருக்கிறது. தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமா யிருக்கிறது* " (1 பேதுரு 3:12).

நம்மைத் தாழ்த்துவது என்றால் என்ன? அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவது மற்றும் ஒப்புக்கொடுப்பது. தொடர்ந்து அவருடைய சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்து வாழப் பழகிக் கொண்டோமானால் பரிசுத்தமான வாழ்க்கை யைப் பெற்றுக்கொண்டு ஆவியின் கனிகளை நம் வாழ்க்கையில் கொடுப்போம். அவைகள் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்பவைகளாகும். இந்த கிறிஸ்தவ குணாதி சயங்களைக் காட்டிலும் வேறு எதை நாம் இந்த வாழ்க்கையிலே பெற்றுக் கொள்ள வேண்டும்? இவைகளை விட வேறு எவைகளை நாம் தேடப்போகிறோம்?

மேலும், நாம் நம்மை தாழ்த்தி கீழ்ப்படியும்போது சரியான நேரத்தில் அவர் உயர்த்துவார். " *ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்* " (1 பேதுரு 5:6).

தேவன் தொடர்ந்து காரியங்களை தலைகீழாக மாற்றிக் கொண்டே வருகிறார். தாழ்மையுள்ளவர்கள் மேல் தம் கிருபையை அளவில்லாமல் பொழிந் தருளுகின்றார். அதேசமயத்தில், பெருமையுள்ளவர்களுக்கு ஆசீர்வாதங்களை அடைத்து விடுகிறார். அழிவுக்கு முன்னானது அகந்தை என்று நீண்ட காலத்துக்கு முன்பே ஞானி சாலமோனால் ஆவியானவரின் துணையோடு கூறப்பட்டுள்ளது.

இதை வாசித்த அன்பு சகோதரிகளே! நாம் தேவனுக்கு முன்பாகவும், மனிதர்களுக்கு முன்பாகவும் பெருமை கொள்ள வேண்டாம். தாழ்மையாய் இருப்பது என்றால் என்ன? தேவனுடைய சித்தத்தின்படி செய்வது தான் தாழ்மை. உன்னைப் போல் பிறனையும் நேசி. நமக்கு பிறர் என்ன செய்ய வேண்டுமென்று விரும்பு கிறோமோ அதையே நாம் பிறருக்கும் செய்து விட்டால் போகிற போக்கில் தாழ்மை குணத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியும். மலைப் பிரசங்கத்தில் இயேசு அதைத் தானே வலியுறுத்துகிறார் (மத். 7:12). பிறரால் மரியாதையையும், வந்தனங் களையும் எதிர்பார்க்கிற நாம் தேவனால் படைக்கப்பட்ட மற்றவர்களுக்கும் அதை திருப்பிக் கொடுக்கும்போது தாழ்மை அங்கே வந்து விடுகிறது. இப்படியே ஒவ்வொரு குணமும், குணாதிசயங்களும் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப் படியும்போது நமக்கு இயற்கையாகவே கிடைத்து விடுகிறது. இந்த உண்மையை புரிந்து கொண்டோமானால் தேவன் எதிர்பார்க்கும் அனைத்து பண்புகளும் சுலபமாக நம்மிடம் சேர்ந்து விடும்.

இயேசு தேவனுக்கு கீழ்ப்படிந்தார். நாம் இயேசுவுக்கும், தேவனுக்கும் கீழ்ப் படிய வேண்டும். எப்படிக் கீழ்ப்படிவது? அவர் கொடுத்த வார்த்தைகள் வேதத்தில் இடம் பெற்றுள்ளது. அவைகளுக்கு கீழ்ப்படியும்போது அவைகளைக் கொடுத்த தேவனுக்கு நாம் தானாகவே கீழ்ப்படிந்து விடுவோம்.

கர்த்தர் கிருபையாய் கூட்டிக் கொடுத்த இப்புத்தாண்டிலே அவ்வாறு செய்ய முயற்சி எடுப்போம். தேவன் அதற்கு உதவி செய்வாராக! ஆமென்!!

## நம் ஜீவன் எப்படிப்பட்டது?

1. கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறது (யாக். 4:14)
2. நாம் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது (யோபு 7:6)
3. நாம் நாளைக்காக கவலைபடக்கூடாது (மத். 6:34)
4. மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது (1 பேதுரு 1:24)
5. நாம் நம் நாட்களை என்ன கற்றுக்கொள்ள வேண்டும் (சங். 90:12)

வாலிபர் பகுதி

# வாழ்க்கை வாழ்வதற்கே

**Bro. Benny Martin**

வாலிபக் கண்மணிகளாகிய உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரியமானவர்களே! நாம் ஒவ்வொரு புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும்போது கடந்த காலங்களில் நம்மை எல்லா தீங்குகளிலிருந்தும் காப்பாற்றி கண்ணின் மணிகளைப் போல் காத்து வருகின்ற தேவனுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோமோ? நாம் வாழ்கின்ற வாழ்க்கை தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஈவு என்பதை பல நேரங்களில் மறந்து விடுகிறோம். இன்று பல வாலிபர்கள் வாழ்க்கையின் மதிப்பை உணராமல் அதை தங்கள் தவறான செயல்பாடுகளினால் சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் வாழ்க்கையே வெறுத்துவிட்டது என்று சொல்லி அரைகுறையாக வாழ்ந்து தேவனுடைய ஈவாகிய வாழ்க்கையை அர்த்தமற்றதாக, வியர்த்தமாக ஆக்குகிறார்கள். அருமையானவர்களே! தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற வாழ்க்கை எவ்வளவு விலையேறப்பெற்றது என்பதை இப்புத்தாண்டில் நாம் அறிந்து கொள்வோம்.

## I வாழ்க்கை தேவனுடைய வெகுமதி

அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்து தத்துவஞானிகளிடம் பேசும்படி அழைக்கப்பட்டபோது, அவருக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பை மிக முக்கியமான காரியங்களை அவர்களுக்கு அறிவிப்பதில் செலவழித்தார். ஆம்! வாழ்க்கையின் ஆரம்பத்தை அவர்களிடம் வலியுறுத்தினார். மேலும், அவர் எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிறவர் மெய் தேவனாகிய யெகோவா என்பதை மிக நம்பிக்கையாக, உறுதிப்படுத்தினார் (அப். 17:25). பின்பு, இளம் ஊழியரான தீமோத்தேயுவுக்கு எழுதும் போது எல்லா வற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவன் என்று நம் சிருஷ்டிகரை நினைவுப் படுத்துகிறார் (1 தீமோ. 6:14). டார்வின் கொள்கை மனிதன் பரிணாம வளர்ச்சியில் குரங்கிலிருந்து வந்தான் என்று சொல்கிறது. அப்படியென்றால் பரிணாம வளர்ச்சியில் வேறொரு ஜீவராசியாக மனிதன் மாறியிருக்க வேண்டுமே, நாம் இன்றும் குரங்குகளை எல்லாம் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறோம். தேவனால் குரங்குகளாக படைக்கப்பட்டவைகள் குரங்குகளாகத்தான் இருக் கின்றன; தேவனால் மனிதனாக படைக்கப்பட்ட மனிதன் மனிதனாகத்தான் இருக் கின்றான். மனிதன் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறான். வேறெந்த

சிருஷ்டியும் தேவ சாயலில் படைக்கப்படவில்லை (ஆதி. 1:26,27). எனவே தான், ஒரு மனிதனுடைய உயிரை எடுக்கும் உரிமை எந்தச் சூழ்நிலையிலும் மனிதனுக்கு கிடையவே கிடையாது. வாழ்க்கை பரலோகத்திலிருந்து தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட வெகுமதி என்கிற உண்மையை நாம் ஆழ்ந்து சிந்திக்கும் போது மனிதன் இப்பூமியில் சிருஷ்டிக்கப்பட்டதின் நோக்கத்தை சிந்திக்காமல் இருக்கவே முடியாது. ஏசாயா மனிதன் தேவ மகிமைக்கென்று சிருஷ்டிக்கப்பட்டான் என்று சொன்னார் (ஏசாயா 43:7) அப்படியிருக்கும் போது ஏன் லட்சக்கணக்கான மக்கள் தங்களுக்கும் யெகோவாவுக்கும் சம்மந்தமில்லாதது போல் வாழ்கிறார்கள்? சாலொமோன் ஞானி தன் தள்ளாடும் வயதில் தான் இப்பூமியில் இருப்பதற்கான நோக்கத்தைத் தேடி ஆராய்ந்தார்கள். அவர் தன் வாழ்க்கையை திரும்பிப் பார்க்கும் போது, தன் இளவயதில் மகிழ்ச்சியைப் பெறுவதற்காக சில மதியீனமான காரியங்களில் இறங்கியதை நினைத்து நொந்து போகிறார். சூரியனுக்குக் கீழே வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டறிய அவர் எடுத்த முயற்சிகள் எல்லாம் தோல்வியில் போய் முடிந்தது. கடைசியாக, மனித வாழ்வின் நோக்கம் தேவனுக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளை கைக்கொள்வதுதான் என்கிற முடிவுக்கு வந்தார் (பிரசங்கி 12:13); மனித இனம் வேறு எவ்விதத்திலும் திருப்தி அடையவே முடியாது. எனவே, பிரியமானவர்களே, தேவனுடைய ஈவாகிய வாழ்க்கையை பொக்கிஷமாகக் கருதுங்கள். அதை உங்கள் சிருஷ்டிகரை மகிமைப்படுத்தப் பயன் படுத்துங்கள்; அதற்கான முயற்சியில் நீங்கள் ஈடுபடும்போது இம்மையிலும், மறுமையிலும் ஆசீர்வாதமான ஒன்றை கண்டடைவீர்கள்.

## II வாழ்க்கை என்பது ஒருமுறை அனுபவம்

நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் வாழ்க்கையின் மற்றுமொரு நிலை ஒருவர் வாழ்க்கையை ஒருமுறைதான் வாழ்கிறார் என்பதாகும். அதாவது, நமக்கு இன்னொரு மனிதப் பிறவி இவ்வுலகில் கிடையாது. சில மதங்களில் போதிக்கப் படுவது போல் மறுஅவதாரம் என்பதெல்லாம் இல்லை. மரணம் நம் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒன்றாக இருக்கிறது. இம்மரணமும் கூட மனிதன் கலகத்தினால் ஏற்பட்ட விளைவுதான் (ரோமர் 5:12). மரணம் என்பது மனிதனுக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிறபடியால் நாம் வாழும் போது தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது அடுத்த வாழ்க்கைக்கு அதாவது நித்திய ஜீவனை சுதந்தரிப்பதற்கு நம்மை நிச்சயப்படுத்திக் கொள்கிறோம். இப்பூமியில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாழ்க்கை நம் நித்தியத்திற்காக ஆயத்தப்படும்படியாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யம் தங்களுடைய இருதயங்களை இலகுவாக்க தேவன் கொடுத்த சிட்சைகளை கண்டுகொள்ளாமல் இருந்தபோது, ஆமோஸ் தீர்க்கதரிசி அவர்கள் மேல் வரவிருக்கும் பயங்கரமான நியாயத்தீர்ப்பைக் குறித்து அவர்களை எச்சரித்தார். "இஸ்ரவேலே உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு " (ஆமோஸ் 4:12). நாம்

இவ்வாழ்க்கை முடிந்து இனிவரும் உலகில் பரலோகத்தை அல்லது நரகத்தைத் தெரிந்தெடுப்பதற்கு ஓர் ஆயத்த களமாகத்தான் இப்பூமி இருக்கிறது.

நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பத்து கன்னிகை களைப் பற்றிய உவமையைச் சொன்னார். அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர் களென்றும், ஐந்து பேர் புத்தியில்லாதவர்களென்றும் சொன்னார். புத்தியுள் கன்னிகைகள் என்று இயேசுவால் அழைக்கப்பட்டவர்கள் ஆயத்தமாயிருந்த கன்னிகைகளாயிருந்தார்கள். மீதமிருந்த புத்தியில்லாத கன்னிகைகள் ஆயத்த மில்லாதவர்களாயிருந்தார்கள் (மத்தேயு 25:1,13). தேவனுக்கும், மனிதனுக்கும் ஜென்ம விரோதியான பிசாசு மனித இனத்திற்கு ஒரு மாபெரும் தீமையை செய்திருக் கிறான். அதென்னவென்றால் நித்தியத்திற்க இப்பொழுதிருந்தே ஆயத்தமாக வேண்டிய அவசியமில்லை அதற்கு இன்னும் நாள் இருக்கிறது என்று மனித மனதில் வித்திட்டு நம்மை ஆயத்தமாகவிடாமல் முடக்கிப்போட்டிருக்கிறான். உதாரணமாக கத்தோலிக்க உபதேசத்தின்படி இப்பூமியில் பாவம் செய்து தங்களை சுத்திகரித்துக் கொள்ள முடியாதவர்களின் ஆத்துமாக்கள் பரலோகம் போவதற்கு உதவியாக சுத்திகரிப்பு நிலையம் என்று ஓர் இடம் இருப்பதாகவும் அங்கே போய் அவர்கள் தங்களை முழுமையாக சுத்திகரித்து பரலோகம் போவதற்கு தங்களை ஆயத்தமாக்கிக் கொள்ள முடியும் என்றும் உபதேசம் இருக்கிறது. ஆனால், வேதாகம உபதேசத்தின்படி இப்பூமியில் நித்தியத்திற்கு தங்களை ஆயத்தமாக்காத வர்களுக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப்படும் என்று வேதாகமத்தில் எங்குமே சொல்லப்படவேயில்லை. அதென்னவென்றால், இப்பூமியில் ஒருவர் தேவக் கட்டளையாகிய ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படியவில்லையென்றால் அவருடைய இரட்சிப்பு அதோகதி அல்ல அந்த நபருடைய மரணத்திற்குப் பின் கூட இப்பூமியில் உயிரோடிருக்கும் மற்றொருவர் அவருக்குப் பதிலாக ஞானஸ்நானம் பெற்றால் மரித்தவருக்கு இரட்சிப்பு கிடைக்கிறது என்று போதிக்கிறார்கள். ஆனால், இவை களுக்கு ஆதாரமாக பூதக்கண்ணாடி வைத்து அவர்கள் தேடினாலும் வேதத்தில் எதையும் காணவே முடியாது.

பிரியமான வாலிபக் கண்மணிகளே! இப்பூமியில் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாழ்க்கை விலையேறப்பெற்றது; அதன் மதிப்பை உணராமல் இருக்க வேண்டாம்; அற்பமான காரியங்களுக்காக நாம் அதை வீணடிக்க வேண்டாம். அது உங்கள் கையை விட்டு நழுவி உங்களை ஆயத்த மற்ற நிலையில் விட்டுவிட அனுமதிக்க வேண்டாம். நம் வாழ்க்கை தேவனுடைய ஈவாக இருக்கிறபடியால் அதை அரைகுறையாக அல்ல முழுமையாக தேவனுக்குப் பயந்து வாழ்ந்தால் என்றென்றும் அழிவே இல்லாத நித்திய வாழ்வை இனிவரும் வாழ்வில் அதாவது பரலோகில் தேவன் தந்திடுவார். நித்திய வாழ்வை சுதந்தரிக்க நீங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளையும் தேவன் தாமே வாய்க்கச் செய்வாராக! உங்கள் யாவருக்கும் மீண்டும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

சிறுவர் பகுதி

# தீர்மானம்

Dr. ABEL R. NAYAGAM

எனக்குப் பிரியமான சிறு பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அதோடு என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன். இந்த ஆண்டு உங்களுக்கு எல்லாவிதத்திலும் ஆசீர்வாதமான ஆண்டாக இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன். இந்த வருடமும் தேவன் உங்களை தமது செட்டைகளுக்கு கீழாக மறைத்து, பாதுகாப்பாகவும், சுகமாகவும் வைத்திருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

விடுமுறை முடிந்து பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்து இருப்பீர்கள். அப்படித்தானே? இந்த மாதத்திற்கான உங்கள் பாடம் என்ன தெரியுமா? “தீர்மானம்” எடுப்பது. ஆம் குழந்தை களே! தீர்மானம். தீர்மானம் என்றால் "ஒரு காரியத்தை செய்வேன்" என்று முடிவெடுப்பது; முடிவெடுப்பது மாத்திர மல்ல அந்த காரியத்தை முடிந்த வரை நிறை வேற்றுவது என்று அர்த்தம்.

புதுவருடத்தைப் பற்றி பேசும் போதே அனைவரும் ஏதாவது தீர்மானம் பற்றிப் பேசுவதையும் கேட்டிருப்பீர்கள். அப்படித்தானே? சரி, சிறுபிள்ளைகளாகிய நீங்கள், உங்களை நேசிக்கிற தேவனை பிரியப்படுத்தும்படியாக ஏதாவது ஒரு கரியத்தை தீர்மானமாக எடுத்து செய்வீர்களென்று சொன்னால், இந்த வருடத்தில் அது உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும்.

ஆம், அது உங்களுக்கும் தேவனுக்கும் இருக்கிற உறவை இன்னும் நெருக்கமாக்கும். நீங்கள் என்ன தீர்மானம் எடுக்கலாம் என்று யோசிக்கிறீர்களா? உங்களுக்காக இதோ சில ஆலோசனைகளை தருகிறேன்.

* நான் ஆராதனையில் வாரந் தோறும் தவறாமல் கலந்து கொள்வேன்
* நான் தொடர்ந்து ஞாயிறு பள்ளிக்கு செல்வேன்
* பெற்றோருக்குக் கீழ்ப்படிகிற பிள்ளையாக இருப்பேன்
* தினமும் தவறாமல் வேதம் படித்து, ஜெபம் செய்வேன்
* தினம் ஒரு வேத வசனம் மனப்பாடம் செய்வேன்
* என் நண்பர்களை சபைக்கு அழைத்துச் செல்வேன்
* எந்த காரியத்திலும் உண்மையை மட்டும் பேசுவேன்.

ஆம், பிள்ளைகளே! நீங்கள் தேவனை பிரியப்படுத்தும்படி இந்தத் தீர்மானங்களை எடுக்க உங்களை உற்சாகப்படுத்துகிறேன். இதுபோலவே

தேவனைப் பிரியப்படுத்தும் காரியங்களைச் செய்து அவருடைய ஆசீர்வாதம் பெற்ற அநேகரை வேதத்திலே வாசிக்கலாம். உதாரணமாக, ஜெபத்தில் தானியேலின் உறுதியைப் பாருங்கள்! தேவன் தானியேலோடு இருந்து, அவரை ஆசீர்வதித்தார். அதற்கு ஒரு காரணம் அவர் தேவனை நோக்கி மூன்று வேளை ஜெபம் செய்தார்!!

நீங்களும் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டாமா? தீர்மானம் எடுங்கள்! இப்புதிய ஆண்டில் நீங்கள் ஆசீர்வாதமாய் இருப்பீர்கள்! சரியா!!

தேவன் உங்களோடு இருப்பார்.

## நாளும், நடப்பும்

1. அமெரிக்காவில் இந்திய துணைத்தலைவர் கைது செய்யப்பட்டதால் இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளின் சலுகைகள் பறிப்பு.
2. மக்களவையில் லோக்பால் மசோதா நிறைவேறியது
3. வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது GSLV-D5 ராக்கெட்
4. மானியமில்லா கேஸ் சிலிண்டர் விலை உயர்வு
5. ஆவுஸ் தொடரை முழுமையாக வென்றது ஆஸ்திரேலியா
6. அமெரிக்காவில் விண்வெளி ஆராய்ச்சி மாநாடு : " இஸ்ரோ " குழு பங்கேற்பு.
7. கல்வியில் முன்னேறினால் இந்தியா தான் முன்னோடி : ஜனாதிபதி.

# உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதே!

**Bro. தானியேல் துரைராஜன்**

## *Don't Compromise With World*

பார்வோன், மோசேக்கும் இஸ்ரவேலர்களுக்கும் நான்கு சமரச உடன்பாட்டினை வைக்கிறான்.

சமரச உடன்பாடு என்பது, அரசியலிலும், சில தொழிலாளர் பிரச்சனைகளிலும் அதிகமாக பயன்படுத்தப்படும் சொல். பிரச்சனையை தீர்க்க இரு திறத்தாரும் ஒரே கருத்தினை ஒத்துக்கொண்டு மேற்கொள்ளும் உடன்பாடு.

**வேதாகமத்தில் சில சமரச உடன்பாடுகளுண்டு அவை**

1. தேவன், யோசுவாவிடம், கானானின் குடிகள் யாவரையும் அழிக்கும்படி சொன்னார். ஆனால், கிபியோனியர்கள், யோசுவாவிடம் தந்திரமாக பேசி சமரச உடன்பாடு செய்து கொண்டு அவனுக்கு வேலைக்காரர்களானார்கள் (யோசுவா 9:24).

2. தேவன், சவுலிடம் அமலேக்கியர்களுடைய எல்லாவற்றையும் அழிக்கச் சொன்னார் (2 சாமு. 15:3). ஆனால், சவுல், சமரச உடன்பாடு செய்து கொண்டு ஆடு மாடுகளை பலி செலுத்த பாதுகாத்து வைக்கிறான். (1 சாமு. 15:15). தேவனற்ற இந்த உடன்பாட்டினால் அவர் கடுமையாக கண்டிக்கப்பட்டு, ராஜ்யபாரம் அவரிடமிருந்து பிடுங்கப்பட்டது.

**இன்றைக்குக் கூட ஏராளமான சமரச உடன்பாடுகள் கிறிஸ்தவத்திலுண்டு**

a) நவீன தற்கால உலக போதனையோடு சுவிசேஷர்களின் சமரச உடன்பாடு.

(உதாரணம்) செழுமையின் போதனைகள் சினிமாத்தனமான நடனங்கள், இசைக்கருவிகள் போன்றவை.

b) கிறிஸ்தவர்களின் பாவத்தோடு செய்து கொள்ளப்படும் சமரச உடன்பாடு.

c) சபை - உலகத்தோடு செய்து கொள்ளும் சமரச உடன்பாடு

d) பிரசங்கியார்கள் மக்களோடு செய்து கொள்ளும் சமரச உடன்பாடு

(உதாரணம்) மக்களை பிரியப்படுத்தும் போதனைகள் மக்களை தாலாட்டும், குளிப்பாட்டும் போதனைகள் செய்வது.

### I. பார்வோனுடைய முதலாம் சமரச உடன்பாடு (யாத். 8:25)

**" தேசத்தில் தானே பலியிடுங்கள் "**

தேவனுடைய கட்டளை மிகவும் தெளிவாக இருக்கிறது யாத். 5:3ல் " ..... எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படி போக விட வேண்டும். அதுவும் மூன்று நாள் பிரயாணமாய் வனாந்திரத்தில் போய் பலிசெலுத்த வேண்டும் " என்றார்கள்.

தேவனுடைய கட்டளை, பிரத்யேகமானது. அவர்கள் (இஸ்ரவேலர்) முழுமையாக கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆனால், பார்வோனுடைய சமரச உடன்பாடு, " பகுதி கீழ்படியச் செய்யக் கூடியது ".

தேவனுடைய கட்டளை, இஸ்ரவேலர்களை எகிப்தியரை விட்டுப் பிரிந்து போகும்படியாக கேட்டுக் கொள்ளுகிறது.

இன்றைக்கும் தேவன் உலகத்தை விட்டு பிரிந்து போகச் சொல்லுகிறார். மோசே, எந்த சமரசத்திற்கும் இடமளிக்காமல் 100% கீழ்ப்படிய வேண்டும். உண்மையான ஆராதனை, பிரிந்து போகுதலோடு தொடர்புடையது. துர்க்கிரியை விட்டும், அசுத்தத்தைவிட்டும், அவிசுவாசத்தை விட்டும் பிரிந்து போகுதல் வேண்டும்.

ஒரு சராசரி மனிதனின் எண்ணம், எவையெல்லாம் உண்மையாய் செய்யப்படுகிறதோ அவையெல்லாமே ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது. எந்த மதமாக இருந்தால் என்ன? இப்படியான சமரசம் நமக்கு ஏற்புடையதல்ல. ஏனெனில், தேவன், நமக்கு பிரத்யேகமான மாதிரியையும், சட்டத்தையும் கொடுத்திருக்கிறார். அவைகளின்படி செய்கிறவனே பாக்கியவான்.

## II. பார்வோனுடைய இரண்டாவது சமரச உடன்பாடு (யாத். 8:28)

### " நீங்கள் அதிக தூரமாய் போய்விட வேண்டாம் "

சும்மா அந்த எல்லை வரை போனால் போதும், ஏதோ 1 மைல் அல்லது அதற்கு கொஞ்சம் மேலே போனால் போதும் என்றான். ஏன் பார்வோன் பயந்தான்? ஒரு தடவை எகிப்தை விட்டு போய் விட்டால், அவர்கள் கானானுக்கு தப்பி ஓடிவிடுவார்கள். அவன் எப்பொழுதுமே அவர்களை தன் கண் பார்வை யிலேயே வைத்திருக்க விரும்பினான். எப்பொழுது தேவைப்படுகிறதோ அப்பொழுது இஸ்ரவேலர்களை திரும்ப அழைத்துக் கொள்ளலாம் என்பது அவன் திட்டம்.

நீங்கள் மனமாற்றம் அடைந்தவுடனே, சரியானதை செய்ய நாடுங்கள். பாவத்தோடு சமசர உடன்பாடு வேண்டாம். உங்களுக்குப் பின்னால் விட்டு வந்த பாவத்தை எரித்துப் போடுங்கள். ஏனெனில், மீண்டும் உலகத்திற்கு திரும்ப வேண்டாம்.

நீங்கள் பழைய பாவ மனுஷனை ஒழித்துப் போடுங்கள். கெட்ட பழக்கங்களை விட்டு ஒதுக்குங்கள். கிறிஸ்துவுக்காய் நில்லுங்கள்.

ரோமர் 13:14 " துர் இச்சைகளுக்கிடமாக உடலைப் பேணாதிருங்கள் ".

## III. பார்வோனுடைய மூன்றாவது சமரச உடன்பாடு (யாத். 10:8,11)

### " உங்களுடைய புருஷர் மட்டும் போகட்டும் "

பார்வோனுக்கும், சாத்தானுக்கும் நன்றாகவே தெரியும், புருஷர் மட்டும் மூன்று நாள் பிரயாணமாக வனாந்திரத்தில் பலி செலுத்த போனால், சீக்கிரமே மனைவி, பிள்ளைகள் அடிமைத்தனத்திற்கு திரும்பி விடுவார்கள்.

சாத்தான் உங்களை எந்த நிபந்தனையோடு சபைக்கு போக விடுகிறானென்றால், இந்த நிபந்தனையோடு தான். சபைக்கு போங்கள், வீட்டுக்கு வந்தவுடன் எனக்கு (சாத்தானுக்கு) சேவை செய்யுங்கள். வாரத்தில் 1 மணி நேரத்தை தேவனுக்கு ஆராதனையின் மூலம் கொடுங்கள். மீதமுள்ள 167 மணி நேரத்தை எனக்குத்தாருங்கள். பெற்றோர்கள் ஆண்டவரை சேவிக்கட்டும், பிள்ளைகள் பிசாசின் பிள்ளைகளாக வளரட்டும்.

நீங்கள், சபைக்கு பிரதிநிதிகளை அனுப்பி வைக்கிற முறையை குறித்து எச்சரிக்கையாக இருங்கள். முழு குடும்பத்தையும் அழைத்துச் செல்லுங்கள். மோசே சொன்னார். நாங்களெல்லாரும் கண்டிப்பாக போக வேண்டும். புருஷர், ஸ்திரீகள், வயோதிகர், வாலிபர் எல்லோரும்! அப்படியே சபைக்கும் கண்டிப்பாக எல்லோரும் போக வேண்டும்!!

## IV. பார்வோனுடைய நான்காவது சமரச உடன்பாடு (யாத். 10:24,27)

### " ஜனங்கள் போகட்டும், ஆனால், ஆடு, மாடு வேண்டாம் "

எல்லோரும் போங்கள் மூன்று நாள் பயணமாக போங்கள், தேவன் சொன்ன இடத்துக்குப் போங்கள், பலி செலுத்துங்கள். ஆனால், ஆடு, மாடு வேண்டாம்.

ஆடு, மாடு இல்லாமல் அவர்கள் எப்படி பலி செலுத்த முடியும்? நாமும் கூட தேவனுக்கு நம்முடைய காணிக்கைகளை செலுத்தாமல் எப்படி ஆராதிக்க முடியும்?

தேவன், நிபந்தனையில்லாமல் நம்மிடம் கேட்கிறார். நம்முடைய குடும்பத்தை நம்முடைய எல்லாவற்றையும் கேட்கிறார். ஆடு, மாடு என்பது நம்முடைய ஆஸ்தி. அது எங்கேயோ அங்கே நம்முடைய இருதயம் இருக்கும். பார்வோன் இஸ்ரவேலர்களோடு சமரச உடன்பாடு செய்து கொண்டது போல, பிசாசு நம்முடன் சமரச உடன்பாடு செய்து, நம்மை தம்மண்டையில் அவ்வப்போது இழுத்துக் கொள்கிறான்.

" பிசாசு ஏவாளை வஞ்சித்தது போல கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி நம்முடைய இருதயமும் கெடுக்கப்படுமோவென்று பயந்திருந்தார் " அப்போஸ்தலர் பவுல் அவர்கள் (2 கொரி. 11:3).

முடிவாக : பவுல் அவர்கள் மனமாற்றமடைந்தவுடனே, தம்முடைய பழைய பாவ வாழ்க்கையை துண்டித்துப் போட்டார். " பரிசுத்தமும், கறை படாததுமான பக்தி " அவரிடம் காணப்பட்டது (யாக். 1:27).

கலப்படமற்றதும், நீர்த்துப் போனதுமல்ல, நீர்த்துப் போகாததுமான பக்தி உலகத்தை விட்டு பிரிதல் என்பது. கிறிஸ்துவுக்கு உன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்தல். பிசாசோடும், உலகத்தோடும் சமரச உடன்பாடு செய்யவே வேண்டாம்.

.... " நான் நிற்கும் பாறை கிறிஸ்து தான். வேறஸ்திபாரம் வெறும் மணல்தான் என்று சொல்லுவோம் ".

# சுவிசேஷ ஜோடி

## Bro. Randal Matheny

“ ஒற்றுமைக்காக வேற்றுமை ” என்கிற கொள்கை உலகத்திலும், குடும்பத்திலும், சபையிலும் சமமாக வேலை செய்கிறது. “ வேற்றுமை ஆனால், ஒற்றுமை ” அல்லது “ வேற்றுமையில் ஒற்றுமை ” போன்ற சொற்றொடர்கள் இந்த கொள்கையைப் புரிந்து கொள்ளாததையே நமக்குக் காட்டுகின்றன. ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் தான் தேவன் வேற்றுமையை உண்டாக்கினார்.

இந்த உலகம் ஒற்றுமை என்கிற எண்ணத்தையே மறந்து விட்ட படியால், வேற்றுமையை வலியுறுத்தி வருகிறது. ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் மகளிர் இயக்கங்கள் பெண்ணுரிமைகளையும், சமத்துவத்தையும் மிகைப்படுத்தி வருகின்றன. இது, ஒடுக்கப்பட்டோர் ஒடுக்குவோர் மீது எடுக்கும் நடவடிக்கையாகும்.

இந்தச் சூழ்நிலையில், இங்கே ஒரு தம்பதியினரைப் பார்த்து நாம் உற்சாக மடைகிறோம். அவர்கள் வீட்டில் அதிகாரத்திற்காக சண்டையிடாமல், தேவனு டைய ராஜ்யத்தின் நலனிற்காக ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு கொடுத்தார்கள். ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் தம்பதியினர் ஒருங்கிணைந்து கர்த்தருக்காக வேலை செய்தபடியால் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டு, தொடர்ந்து கர்த்தருடைய வேலை யைச் செய்யும்படியாக அனுமதிக்கப்பட்டார்கள்.

### கொரிந்துவில் பவுலை ஏற்றுக் கொள்ளுதல்

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்திற்கு வரும் போது இந்தத் தம்பதியினரை நாம் முதன் முதலாகப் பார்க்கிறோம் (அப். 18:1-2) அவர்கள் அரச ஆணையின்படியே மற்றயூதர்களோடே ரோமாபுரியிலிருந்து துரத்திவிடப் பட்டார்கள். அவர்கள் கொரிந்து பட்டணத்திற்கு வந்து அங்கே கூடாரத் தொழில் செய்து வந்தார்கள். பவுலும் அதே தொழிலைச் செய்து அவர்களோடு தங்கினார். அப்போஸ்தலனாகிய பவுல் உங்கள் வீட்டில் தங்குவதாக கற்பனை செய்து பாருங்கள்! அங்கே தங்கியிருந்த போது, பவுல் தரிசனங்களைக் கண்டார் (அப். 18:9,10).

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் பவுலின் வேலையில் பங்கு பெற்று ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு, பவுல் சீரியா தேசத்திற்குச் சென்றபோது அவர் களும் கூடச் சென்றார்கள் (வசனம் 18,19). எபேசு பட்டணத்துக்கு வந்தபோது, அவர்களை விட்டு விட்டு பவுல் வேறு இடத்துக்கு செல்ல வேண்டியதாயிருந்தது. எபேசுவிலே அவர்களுக்கு கர்த்தருக்கென்று செய்யும்படியாக அநேக வேலைகள் இருந்தன.

பிரசங்கியாரான அப்பொல்லோ எபேசுவுக்கு வந்தபோது, அவனுக்கு அதுகாறும் தெரியாமலிருந்த அவசியமான வேதாகம உண்மைகளை ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவனுக்கு அறிவித்தார்கள். அதுமட்டுமல்ல “*ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்*” (அப். 18:26). அவர்கள் இருவரும் பவுலோடு இருந்து தேவனுடைய சித்தத்தைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இப்போது இவர்களால் மற்றவர்களுக்குப் போதிக்க முடியும்.

(1தீமோ. 2:2ல், பவுல் தீமோத்தேயுவிற்கு என்ன சிபாரிசு செய்தாரோ அதைத் தானும் பயன்படுத்தினார்). பின்பு அப்பொல்லோ அகாயா நாட்டிற்குப் போகவேண்டுமென்றிருக்கையில், "*சீஷர்கள் அவனை ஏற்றுக் கொள்ளும்படி ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவர்களுக்கு எழுதினார்கள். அப்பொல்லோ அங்கே வந்த பின்பு கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான்*" (அப். 18: 27).

பின்பு பவுல் எபேசுவுக்குத் திரும்புகிறார். அங்கேயிருந்து அவர் 1 கொரிந்தியர் நிருபத்தை எழுதினார். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் கொரிந்து சபைக்கு வாழ்த்துதல்களை அனுப்பினார்கள்: " ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள் " (1கொரி. 16:19). அவர்கள் அநேக சீஷர்களுக்கு கூட்டங்களை நடத்த தங்கள் வீடுகளை திறந்து வைத்தார்கள். அவர்களுடைய உபசரிப்பும், ஆவிக்குரிய வேலைக்காக கொடுக்கும் ஆசையும் அநேக வழிகளில் சகோதரர்களுக்குத் தங்களை அர்ப்பணிக்கக் காரணங்களாக அமைந்தன.

## ரோமாபுரிக்குத் திரும்புதல்

பவுல் ரோமாபுரியாருக்கு கடிதங்களை எழுதினபோது ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் ரோமாபுரியில் இருந்தார்கள். அவர்களுக்குப் பவுல் இவ்விதமாக வாழ்த்துதல் அனுப்புகிறார். "*கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன்வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாவையும், ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள், அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள். அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ள வர்களாயிருக்கிறார்கள்*" (ரோமர் 16:3,4).

இவ்விருவரும் தேவனுடைய ஊழியமாகிய சுவிசேஷத்தைப் பல தேசங்களுக்கு எடுத்துச் செல்லும் பணியில் தங்கள் உயிரைக் கூடப் பெரிதாக நினைக்கவில்லை (அநேகமாக அப். 18 ஆம் அதிகாரத்தில் கொரிந்துவில் இருந்திருக்கலாம்). தேவனுடைய ராஜ்யத்தில் அவர்கள் வகித்த முக்கியப் பங்கை பவுல் நன்றியோடு அங்கீகரிக்கிறார்.

இங்கே இந்த தம்பதியினர் பற்றிக் குறிப்பிடுவதன் மூலம், அவர்கள் ரோமாபுரியிலும் செய்து வருகின்ற முக்கிய வேலையின் மதிப்பை அங்கீகரிக்கிறார். இவ்விருவரும் ஆவிக்குரிய நோக்கங்களுக்காக ரோமாபுரிக்குத் திரும்பும் அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக ரோமாபுரியை விட்டுச் சென்றார்களா அல்லது கொரிந்துவிலே பவுலால் மனமாற்றம் செய்யப்பட்டார்களா என்பது நமக்குத் தெரியாது. ஆனாலும், ரோமர்களுக்கு முதல் முறையாக சுவிசேஷத்தை அறிவிக்கவோ அல்லது ராயனுடைய கட்டளையால் தடைபட்டிருந்த தங்களால் தொடங்கப்பட்ட வேலையை முடிக்கவோ ரோமாபுரிக்குத் திரும்பியிருக்கலாம்.

## மறுபடியும் எபேசுவில்

பவுல் தன் ஊழியத்தின் கடைசியில், எபேசுவில் ஊழியம் செய்து கொண்டிருந்த தீமோத்தேயுவிற்கு, இரண்டாவது நிருபத்தை எழுதுகிறார். மறுபடியும், அந்த பட்டணத்தில் ஆக்கில்லாவையும், பிரிஸ்கில்லாவையும் நாம் காண்கிறோம். " பிரிஸ்கில்லாளுக்கும், ஆகில்லாவுக்கும், ஒநேசிப்போருவின் வீட்டாருக்கும் என் வாழ்த்துதலைச் சொல்லு " (தீமோ. 4:19). ஒருவேளை, பவுல் அவர்களை தீமோத்தேயுவுடன் இணைந்து வேலை செய்யும்படி எபேசுவுக்கு அனுப்பியிருக்கலாம். இருந்தபோதிலும், அவர்கள் கிறிஸ்துவுக்கு சேவை செய்வதற்காக ஒருமுறை அல்ல, பலமுறை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள், தங்களோடு இணைந்து ஊழியம் செய்கின்ற மற்ற சகோதரர்களுடன் சேர்ந்து அந்த சாம்ராஜ்யம் முழுவதும் சுறுசுறுப்பான வேலையாட்களைக் கொண்ட ஓர் ஆவிக்குரிய கூட்டமைப்பை உருவாக்கினார்கள்.

ஆக்கில்லா, பிரிஸ்கில்லாளுடைய பெயர்கள் 6 முறை மேற் கோள்காட்டப் பட்டிருக்கிறது. அதில், பிரிஸ்கில்லாளுடைய பெயர் 4 முறை தன் கணவனுடைய பெயருக்கு முன்பாக மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது. வேத அறிஞர்கள் பிரிஸ்கில்லாள், ஆக்கில்லாவை விட சுறுசுறுப்புடன் செயல்படுகிற கிறிஸ்தவளாக இருந்திருக்கலாம் என யூகிக்கிறார்கள். இன்னும் சிலர், ஆக்கில்லாவை விட பிரிஸ்கில்லாள் உயர் வகுப்பைச் சேர்ந்த பிரஜையாக இருந்திருக்கலாம் என்றும், ஒரு சிலர் பிரிஸ்கில்லா சபையில் எல்லோராலும் அறியப்பட்டிருக்கலாம் என்றும் கருதுகின்றனர்.

பெயர் வரிசை அடிப்படையிலான யூகம், ஒன்றிற்கு மற்றொன்றை விட முக்கியத்துவம் கொடுக்க நமக்குக் காரணமாக அமைகிறது. இருப்பினும், இவர்கள் தங்கள் நோக்கத்தில் ஒற்றுமையாயிருந்து, ராஜ்ஜியத்தின் வளர்ச்சிக் காகக் கடுமையாகப் பாடுபட்டார்கள் என்பதை இவர்களது வாழ்க்கையில் காண முடிகிறது. அவர்கள் கிறிஸ்துவுக்காகவும், சகோதரருடைய தேவைகளுக்காகவும் தங்களையே கொடுக்க விருப்பமுள்ளவர்களாயிருந்தார்கள்.

**அவர்களைப் போன்றவர்களைப் பெருக்கினார்கள்!**

கர்த்தருக்கென்றும், கர்த்தருடைய வேலைக்கென்றும் தங்களை முழுமையாக அர்ப்பணித்த இந்த தம்பதியினர் எவ்வளவு ஆச்சரிய மானவர்கள்! ராஜ்யத்திற்காக அவர்கள் எவ்வளவு செய்திருக்கிறார்கள்! அவர்கள் எவ்வளவு ஊழியம் செய்திருக்கிறார்கள்! புதிய ஊழியப் பணிகளைத் தொடங்கினார்கள், உபசரித்திருக்கிறார்கள், ஆவிக்குரிய நோக்கங்களுக்காக பலமுறை இடம் பெயர்ந்திருக்கிறார்கள், கடின மான வேலைகளைக் கடந்து வந்த அவர்களை நாம் பின்பற்ற வேண்டும் எனக் காட்டியிருக்கிறார்கள், அனுபவமிக்கவர்களிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிறார்கள், குறைவான அனுபவமிக்கவர்களுக்கு போதித்திருக் கிறார்கள், அவர்களை திருத்தியிருக்கிறார்கள், சுவிசேஷப் பயணங்களை உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். இவைகள் எல்லாவற்றையும் விட, ஆவிக்குரிய வேலையை நிறைவேற்ற பூமிக்குரிய வேலையை செய்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அர்ப்பணிப்பு பணியை எடுத்துச் செய்வதற்கு, இவர்களைப் போன்ற பல தம்பதியினரின் வாழ்க்கையில் கர்த்தர் கிரியைச் செய்வாராக. உரிமைகள் பற்றி தற்கால விமர்சகர்கள் சொல்வதையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, நம் கீழ்ப்படிதலுக்கும், நம் துதிக்கும், நம் நன்றிக்கும் கர்த்தர் பாத்திரரா யிருக்கிறபடியால் நாம் கணவன் மனைவியாக முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், அர்ப்பணித்து ஆக்கில்லா, பிரிஸ்கில்லா போன்று ஊழியத்தில் ஒருமைப்பட்டுச் செயல்படுவோமாக!

" அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள் " (மத். 25:34,35).

# பாடம்-38. புது உடன்படிக்கை

Bro. K. பாஸ்கர்

திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே 2014ன் புத்தாண்டு வாழ்த்துக்கள். வசன ரீதியான கிறிஸ்துவின் சபை என்ற பாடங்கள் தொடரும்படியாக தேவன் இந்த புதிய ஆண்டிலும் உதவி செய்திருக்கிறார். அதன் மூலமாக நீங்கள் உண்மையான கிறிஸ்துவின் சபையை அறிந்து அதற்கு மனந்திரும்பிக் குணப்படவே இந்தப் புத்தாண்டை கொடுத்திருக்கிறார். இந்த முதல் மாதத்தில் புது உடன்படிக்கை என்ற பாடத்தைப் படித்து வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொண்டு மனந்திரும்பிக் குணப்படுவோம்!.

## I. *உடன்படிக்கை என்றால் என்ன?*

உடன்படிக்கை என்றால் " ஒப்பந்தம் " என்று பொருள். உதாரணமாக, இரு நாடுகள் ஒரு காரியத்திற்காக ஒப்பந்தம் செய்து கொள்ளுவது போல தேவன் மனுக் குலத்தோடு ஒப்பந்தம் அதாவது உடன்படிக்கை செய்திருப்பதாக பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. உடன்படிக்கை என்ற வார்த்தைக்கு எபிரெயச் சொல் "பெரீத்" எனப்படும். இதற்கு இரண்டு விதமான அர்த்தங்கள் உண்டு. ஒன்று மனிதன் தனக்குத்தானே உடன்படிக்கை செய்து கொள்வது உதாரணமாக, யோபு என்ற தேவ மனிதன் தனக்குத் தானே உடன்படிக்கை செய்து கொண்டார். என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின் மேல் நினைப்பாயிருப்பது எப்படி? என்று (யோபு. 31:1). இன்னொரு பொருள், தேவன் மனிதர்களோடு பண்ணின ஒப்பந்தம். உதாரணமாக, நோவா என்ற தேவ மனிதனோடு தேவன் உடன்படிக்கை பண்ணினார். அதற்கு அடையாளமாக பூமியை ஜலத்தினாலே அழிப்பது இல்லை என்று சொன்னார். அதற்கு அடையாளமாக மேகத்தில் வானவில்லை வைத்தார் (ஆதி. 9:11,13) என்று பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் உடன்படிக்கை என்ற வார்த்தைக்கு கிரேக்கச் சொல் "தியதேக்கே" (Diatheke) என்று உள்ளது. இதன் பொருள், பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட அதே பொருளைக் கொண்டதாக உள்ளது. ஆனால், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் ஏற்படுத்தின உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. (மத். 26:28) எனவே, உடன்படிக்கை என்றால் தேவன் மனுக்குலத்தாரோடு பண்ணின ஒப்பந்தம் என்று பொருளாக உள்ளது. இன்று அநேக கிறிஸ்தவ போதகர்கள் உடன்படிக்கை என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாமல் உள்ளனர். அதனால், பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன் படிக்கைக்கும் வேறுபாடு தெரியாமல் இரண்டையும் கலந்து போதிப்பதைப் பார்க்கலாம். இயேசு கிறிஸ்து இரண்டையும் கலந்து போதிப்பதைக் கண்டித்துள்ளார். (லூக். 5:36,39)

## II. பழைய உடன்படிக்கை

பழைய உடன்படிக்கை என்பது தேவன், தேவ மனிதன் மோசேயோடும், இஸ்ரவேலர்களோடும் பண்ணின ஒப்பந்தத்தையே குறிக்கிறது. தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு அவர்களை கானான் தேசத்திற்குக் கொண்டு போக மோசேயைத் தெரிந்து கொண்டார். அதன்படி அவர்களை சிவந்த சமுத்திரத்தின் வழியாக வனாந்திர மார்க்கமாய் வழி நடத்தினார். மோசே வழியிலே அவர்களுடைய கீழ்ப்படியாமையையும், முறு முறுப்புகளையும், பலவித அக்கிரமங்களையும் தேவன் பொறுத்துக் கொண்டார். அவர்கள் சீனாய் மலை அடிவாரத்திற்கு வந்த போது அவர்களுடைய அக்கிரமங் களைக் கட்டுப்படுத்த மோசேயை அழைத்து பத்துக் கட்டளைகளாகிய உடன் படிக்கையின் வார்த்தைகளைக் கொடுத்தார் (கலாத். 3:19). பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி; இந்த வார்த்தைகளை நீ எழுது. இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலோடும் உடன்படிக்கை பண்ணினேன் என்றார். அங்கே அவன் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவும் பகலும் நாற்பது நாள் கர்த்தரோடே இருந்தான். அவன் பத்துக் கட்டளைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினான் (யாத். 34:27,28). பத்துக் கட்டளைகள் தான் உடன்படிக்கை என்றும் நியாயப்பிரமாணம் என்றும் அழைக்கப்பட்டது (யாக். 2:10,11)

இந்த உடன்படிக்கை அதாவது பத்துக்கட்டளைகள் முற்பிதாக்கள் ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்ற முற்பிதாக்களுக்குக் கொடுக்கப் படவில்லை. இஸ்ரவேலர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. கிறிஸ்து வரும் வரை கொடுக்கப்பட்டது (கலாத். 3:19). வனாந்திரத்தில் சீனாய் மலை துவங்கி இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் வரை கொடுக்கப்பட்டது. இயேசு கிறிஸ்து இந்த உடன்படிக்கையின் கீழ் பிறந்தார். இந்த நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார் (மத். 5:17,18). பின்பு சிலுவையிலே மரிக்கும் தருவாயில் எல்லாம் முடிந்தது என்று இந்த உடன்படிக்கையை தமது மாம்சத்தில் முடித்தார். சிலுவையிலே நியாயப் பிரமாணத்தை ஆணி அடித்து அதை அழித்தார். (எபே. 2:14,15; கொலோ. 2:14) என்று வேத வசனம் கூறுகின்றது. ஆகவே, தேவன் இஸ்ரவேலரோடு ஒப்பந்தம் பண்ணினது இன்று அமுலில் இல்லை என்று நாம் புரிந்து கொண்டு பழைய ஏற்பாட்டின் அறுப்பின் பண்டிகை, பஸ்கா பண்டிகை போன்ற பண்டிகைகளுக்கு விலகி இருப்போம். இவைகளைச் செய்கிறவர்கள் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுகின்றனர். இவர்கள் கிறிஸ்தவர்களே இல்லை என்பதை நாம் அறிந்து கொண்டு அவர்களுக்கு பங்காளிகளாகாதிருங்கள். (2 யோவான் 9:11).

## III. பழைய உடன்படிக்கை

இந்தப் புது உடன்படிக்கை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே உண்டாயிருக்கிறது. இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார். இயேசு கிறிஸ்து (மத். 26:28). புது உடன்படிக்கையானது இயேசுவின் இரத்தத்தினாலே

உண்டாயிருக்கிறது. இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது. அதாவது, பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த நீதிமான்கள் முதற்கொண்டு இன்றைய நாளிலே வாழும் நம் அனைவருடைய பாவங்களையும் சுத்திகரிக்கிறது. இயேசுவின் இரத்தம் அவ்வளவு வல்லமை பெற்றதாக உள்ளது. இயேசு கிறிஸ்து புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார் (எபி. 12:24).

இன்று பரலோகத்தின் தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு உலக மக்கள் அனைவரோடும் புது உடன்படிக்கை செய்துள்ளார். அதுவே கிறிஸ்துவின் சுவிசேஷம். இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் என்ற செய்தியை உலக மக்கள் அனைவருக்கும் சொல்லுங்கள் என்று இயேசு கிறிஸ்து கட்டளையிட்டுள்ளார் (மத். 28:18,20; மாற்கு 16:15,16) அதை விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும் பொழுது இயேசுவின் இரத்தம் நம்முடைய பாவங்களை நீக்கி சுத்திகரிக்கின்றது புது சிருஷ்டியாயிருக்கிறோம் (2 கொரி. 5:17) இந்தப் புதிய ஆண்டிலே புது உடன்படிக்கையை நம்மோடு செய்திருக்கும் தேவனுக்கு நாம் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று புதுவாழ்வு பெற தேவன் வழி நடத்துவாராக!

(தொடரும்)

## ஆவிக்குரிய மனிதனின் செயல்பாடுகள்

1. அவன் வாழ்க்கையில் தேவனுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான் (மத். 6:33)
2. அவன் தேவனைப்பற்றியும் தன் வாழ்க்கை மீதான தேவனுடைய சித்தத்தையும் நன்றாக அறிகிறான் (யோவான் 17:3)
3. அவன் மேலானவைகளை நாடுகிறவனாக இருக்கிறான் (கொலோ 3:12)
4. அவன் ஆவியின் கனியைக் கொடுப்பதற்கு பிரயாசப்படுகிறான் (கலா. 5:22,26).
5. அவன் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரிப்பதில்லை (ரோமர் 12:2)

# சத்தியத்தை யோவான் வலியுறுத்துதல்

***Bro. Clarence Deloach, Jr.***

தெய்வீக சத்தியத்தைப் பேசப் பரிசுத்த ஆவியானவர் வார்த்தை களைப் பயன்படுத்தினார் என்று நாம் விசுவாசிக்கிறோம் (1 கொரி. 2:13). இருப்பினும், பரிசுத்த ஆவியானவர் வெவ்வேறு வேதாகம எழுத்தாளர்களின் ஆள்தத்துவம், வார்த்தைப் பயன்பாடு, பாணி போன்றவைகளுக்கு ஏற்ப வார்த்தைகளைத் தெரிந்து கொண்டது போலவே தெரிகிறது. யோவானின் எழுத்துக்களில் இத்தகைய தனித்துவம் வாய்ந்த பாணியை நம்மால் காண முடிகிறது. யோவான் அன்பு, ஜீவன், சாட்சி மற்றும் சத்தியம் போன்ற வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்தி யிருக்கிறார்.

யோவான் தன் I,II,III நிருபங்களில் சத்தியம் பற்றி வலியுறுத்துகிறதைக் கவனியுங்கள் :

**யோவான் சொல்லும் சத்தியம் அறியப்பட வேண்டிய ஒன்று.**

I யோவான் நிருபத்தின் மைய நோக்கம் கிறிஸ்துவுக்குள்ளான நம் நம்பிக்கை பற்றியது. அறிந்து கொள்ளுதல் என்பது முக்கிய வார்த்தை. சத்தியத்தை அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் முடியும்! அதில் இரகசியமில்லை! அதில் யூகமுமில்லை!

இங்கே, வருத்தப்பட வேண்டிய விஷயம், ஒருவர் தன்னுடைய முயற்சியில் எவ்வளவு தீவிரமாக இருந்து முயற்சித்தாலும் உண்மையாக அவரால் சத்தியத்தை ஒருபோதும் அறிந்து கொள்ளவே முடியாது என்று சிலர் சொல்வது தான். ஒருவர் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியாதென்றால், அவரால் விடுதலை யாகவே முடியாது. ஆனால், சத்தியம் தான் ஒருவரை விடுதலையாக்கும் என்று வேத வசனம் கூறுவதை நாம் மறந்து விடக்கூடாது. (யோவா. 8:32).

**யோவான் சொல்லும் சத்தியம் நாம் அதில் நிலைத்திருக்கிறது போல், அது நமக்குள் நிலைத்திருக்க வேண்டும்.**

சத்தியம் நமக்குள் நிலைத்திருக்கிறபடியால் சத்தியத்தை அறிந்திருக்கிற யாவரையும் யோவான் மெச்சுகிறார், பாராட்டுகிறார் (II யோவா 3). யோவான் தொடர்ந்து சொல்லும் போது, நாம் உபதேசத்தில் (சத்தியத்தில்) நிலைத்திருக்க வில்லையென்றால், நாம் பிதாவையும், குமாரனையும் உடையவர்களல்ல என்கிறார் (III யோவான் 9). கிறிஸ்துவின் உபதேசமாகிய சத்தியம் மிகவும் முக்கியமானது. ஆகவே, அதைக் கொண்டு வராதவர்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது. (II யோவா. 9-11). ஆனால், இன்றைக்கு அப்படி நடக்கிறதா?

**யோவான் சொல்லும் சத்தியம் நம்முடைய செயல்பாட்டை ஆளுகை செய்ய வேண்டும்.**

இது சத்தியத்தை அறிந்திருக்கும் அறிவை விட மேலானது. அது வாழ்க்கையில் பயன்படுத்தப்பட வேண்டும். காயு சத்தியத்தில் நடந்தபடியால் யோவான் அவரை மெச்சினார். கிறிஸ்தவர்கள் உண்மையாக சத்தியத்தில் நடக்கிறார்கள் என்று அறிவது யோவானுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தியது. எனவே, சத்தியம் அறியப்படுவது மட்டுமல்ல, அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

**யோவான் சொல்லும் சத்தியம் என்பது பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று.**

சத்தியத்தைக் கொண்டு வருபவர்களை நாம் ஏற்றுக்கொள்ளும் போது, சத்தியத்திற்கு நாம் உடன் வேலையாட்களாக மாறி விடுகிறோம் (III யோவா. 8). நாம் சத்தியத்தை நேசிக்கும் போது, போதிக்கும்போது, அதை நடைமுறைப் படுத்தும்போது சத்தியத்தோடு நாம் கூட்டாளிகளாக மாறுகிறோம்.

அர்ப்பணிப்பு உணர்வு குறைவாக இருக்கின்ற இந்த நாட்களில் யோவான் வலியுறுத்தும் சத்தியத்தைக் கொண்டு நம் இருதயங்களை நாம் நிரப்ப வேண்டும். அப்படிச் செய்ய ஆயத்தமா?


## அப்போஸ்தலன் யோவானின் சந்தோஷம்

**பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டு கிறேன்.**

**என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கி றார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை.**

**சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்து கொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மை யைக் குறித்துச் சாட்சி கொடுத்த போது மிகவும் சந்தோஷப்பட்டேன்.**

# புதிய வெளியீடு




**550 தமிழ்ப் பாடல்கள்**
**50 ஆங்கிலப் பாடல்கள்**
**40 தமிழ், ஆங்கில குறும்பாடல்கள்**

மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டு
தேர்ந்த முறையில்
பைண்டிங் செய்யப்பட்ட
பாட்டுப் புத்தகம் வேண்டுவோர்
எங்களை தொடர்பு கொள்ளவும்.

**World Evangelism Gospel Media**



## Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 pm
Every Saturday 7:15-7:30 am
} Contact : 98427 30382

## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:


TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)



## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:


TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)


## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:


TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014


# எங்களது இதர வெளியீடுகள்













சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701
Editor. S. Rajanayagam.